# சமூகத்தை சீர்திருத்துவதன் வழிமுறையும் சீர்திருத்தக் குழுவின் பொறுப்புகளும்

(கலீஃபாக்களின் வழிகாட்டல்களின் ஒளியில்)

தொகுப்பு
மர்கஸி இஸ்லாஹி கமிட்டி-இந்தியா

# சமூகத்தை சீர்திருத்துவதன் வழிமுறையும் சீர்திருத்தக் குழுவின் பொறுப்புகளும் (கலீஃபாக்களின் வழிகாட்டல்களின் ஒளியில்)

**Islah-e-Muashara ke tareeq awr Islahi committee ki Zimmadariyan (Tamil)**


தொகுப்பு:
மர்கஸீ இஸ்லாஹீ கமிட்டீ இந்தியா

# சமூகத்தை சீர்திருத்துவதன் வழிமுறையும் சீர்திருத்தக் குழுவின் பொறுப்புகளும்
## (கலீஃபாக்களின் வழிகாட்டல்களின் ஒளியில்)

## Tamil verson of
## Islah-e-Muashara ke tareeq awr Islahi Committee ki Zimmadariyan

Book Name : Islah-e-Muashara ke tareeq awr Islahi Committee ki Zimmadariyan
Compiled by : Markazi Islahi Committee India
Year : 2016
Copies : 1000
Translated by : O.M. Muzzammil Ahmad

Published by : Mansuba Bandi Committee Qadian
Gurdaspur Distt, Punjab, India-143 516
Printed by : Fazl-e-Umar Printing Press Qadian

## முக்கியமான வேண்டுகோள்

நாம் தீமையை அது ஏற்படுவதற்கு முன்பே தடுக்க வேண்டும். அதற்காக ஞானத்துடன் செயல்பட வேண்டும்.ஒவ்வொரு தீமை அல்லது நோய் உருவாகும் அச்சம் இருந்தால் அதைத் தடுப்பதற்கும் சிகிச்சை செய்வதற்கும் எல்லா சாத்தியமான தீர்வையும் மேற்கொள்ள வேண்டியது சீர்திருத்தக் குழுவின் பொறுப்பாகும்.

இது தர்பிய்யத் மற்றும் கண்காணிப்பின் பணியாகும். எவனே அநுதாபம், அன்பு, நன்மையை நாடுதல், துஆக்கள் ஆகியவற்றின் மூலமாக சீர்திருத்தத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். எந்த இடத்திலாவது முயற்சி செய்தும் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்றால் மேலிடத்திற்கு தலவல் கொடுங்கள்.சீர்திருத்தக் குழுவில் விவாதற்கு வரும் அனைத்து விவகாரங்களும் உறுப்பினர்களிடம் ஜமாஅத்தின் அமானிதங்களாகும். வெளியே அவற்றைக் கூறுவது ஒருபோதும் பொருத்தமன்று.

## சீர்திருத்தக் குழு செயல்பட வேண்டிய வழிமுறை

*(ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டல்கள்)*

''நான் ஒரு சீர்திருத்தக் குழுவை நிலைநாட்டியிருந்தேன். மேலும் நாடு தழுவிய அளவில் எல்லா நடுகளுக்கும் நீங்கள் சீர்திருத்தக் குழுக்களை உருவாக்குங்கள். நீங்கள் சில தீமைகளை அடையாளம் கண்டு அவை புரையோடிய புண் ஆவதற்குள் அவற்றை சீர்திருத்த முயற்சி செய்யுங்கள்; நல்லொழுக்கத்தில் நோய்வாய்ப்பட்ட உங்கள் நோயாளிகளை குணமளிக்க முயற்சி செய்யுங்கள் என்று வழிகாட்டியிருந்தேன்.......**நான் கூறியிருந்த அறிவுரை என்னவென்றால், சீர்திருத்தக் குழு அறிவுள்ளவர்களையும், ஆழமான உணர்வுகளையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் தீமைகளை நுகர்ந்து எங்கெல்லாம் தீமையின் நாற்றம் இருக்கிறது என்பதை அவர்கள் அறிய வேண்டும். தென்படாவிட்டாலும் அவர்களின் நுகர் திறமை எங்கேயோ ஆபத்து இருக்கிறது என்பதை அவர்களுக்கு உணர்த்தி விட வேண்டும். பிறகு அவை நோயாக மாறுவதற்குள் முறைப்படி நீக்கி விட வேண்டும்.** எங்காவது குழப்பம் ஏற்படட்டும்; பூசல் ஏற்படட்டும்; எங்கேயாவது கொலை நடக்கட்டும். பிறகு சீர்திருத்தக் குழு செயல்படத் துவங்கட்டும் என நீங்கள் காத்திருப்பீர்கள் என்றால் அது சீர்திருத்தக் குழு அன்று; அது காவல் துறை குழுவாகி விடும்.........மேலும் ஒரு மேலிட சீர்திருத்தக் குழு மட்டுமின்றி, பெரிய நகரங்களிலும் நகர அளவில் ஓர் உணர்வுப்பூர்வமான சீர்திருத்தக் குழுக்கள் நிலைபெறுவது அவசியமாகும். அவை பொது மனிதனுக்கு இன்னும் தீமைகள் தென்படாத அளவுக்கு எல்லா விதமான தீமைகளையும் கவனத்தில் வைக்க வேண்டும்.........என்னென்ன நோய்கள் பரவவிருக்கின்றன? பரவ சாத்தியமிருக்கின்றன? என்ற

அறிகுறிகளை நீங்கள் அறியும்போது அவற்றை நீக்குவதற்காக நீங்கள் முயற்சி செய்யும்போது பிறகு அது சீர்திருத்தக் குழுவின் வேலை மட்டுமன்று. சீர்திருத்தக் குழுவின் வேலையெல்லாம், உணர்வதும், ஜமாஅத்தை எச்சரிப்பதும், செயற்குழுவில் அந்த விஷயங்களை எடுத்து வைப்பதும் ஆகும். பிறகு செயற்குழு தனது ஒட்டுமொத்தமான முறையில் ஒரு பொறுப்பாளரை மட்டுமில்லாமல், சில நேரத்தில் 2, 3, 4 பொறுப்பாளர்களை இயக்க வேண்டியது வரும். சில இடத்தில் இஸ்லாஹோ இர்ஷாது செயலரின் கீழ் செயல் வந்து விடும். சில இடங்களில் உங்களுக்கு சில நிலைமைகளில் பணத்தின் தேவை ஏற்படும். சில பிரசுரங்களை வெளியிட வேண்டியது வரும். சில இடங்களில் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள வைக்க வேண்டியது வரும். முரப்பிகளின் அமைப்பை தூண்ட வேண்டியது வரும். சுருக்கமாக, பல சாத்தியக்கூறான தீர்வுகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி சில நேரத்தில் செயற்குழுவில் கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே அப்படிப்பட்ட பிரச்சனைகளை செயற்குழுவில் வையுங்கள்.'' (குத்பாத்தே தாஹிர் தொகுதி 13 பக்கம் 339-341)

''....... எந்த குடும்பத்தில் பலவீனங்களின் அடையாளங்கள் காணப்படுகின்றனவோ எவர்களின் பெண் பிள்ளைகள் பொருட்படுத்தாமல் இருக்கின்றார்களோ எவர்களின் ஆண் மக்கள் வெளியே முகந்திருப்பி விட்டார்களோ ஜமாஅத்துடன் அன்பு கொள்வதற்கு பதிலாக அவர்களின் தொடர்பு படிப்படியாக துண்டிக்கப்பட்டு மற்றவர்களின் மீது அன்பு கொள்வதன் பக்கம் சென்று கொண்டிருக்கிறதோ அவர்களின் மீது கவனம் செலுத்தி அவர்களை அன்புடனும் நேசத்துடனும் திரும்பக் கொண்டு வருவது மிக எளிதாகும். விவகாரம் எல்லையை கடந்து சென்று தீமைகள் ஒருவரிடம் நுழைந்து விட்ட அந்த நேரத்தில் அந்தத் தீமைகளை சுரண்டி உலலிருந்து வெளியே எடுத்து தூக்கி எறிவது மிகவும்

கடினமானதாகும்.''(குத்பாத்தே தாஹிர் தொகுதி 11 பக்கம் 310-311)

(சீர்திருத்தக் குழு உறுப்பினர்களாகிய) இவர்கள் தத்தமது வட்டத்தில் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மஜ்லிஸ் அன்சாருல்லாஹ், லஜ்னா இமாயில்லாஹ் ஆகியயோரிடமிருந்து முழுக்க முழுக்க பயன்பெறுவதற்கு அதிகாரமும் உரிமையும் உண்டு. அவர்கள் பொருத்தமெனக் கருதினால் சில விகாரங்களை குத்தாம் மூலமாக சரி செய்யலாம்; சில விவகாரங்களை லஜ்னா மூலமாக சரி செய்யலாம். சில இடங்களில் மூன்று கிளை அமைப்புகளும் ஒரே நேரத்தில் முயற்சி செய்ய வேண்டியது வரும். ஒரு குடும்பத்தின் விவகாரம் சென்றால் அதில் தாக்கத்தை உருவாக்குவதற்காக குத்தாமும் இயங்க வேண்டியது வரும்; அன்சாரும் இயங்க வேண்டிஅய்து வரும்; லஜ்னாவும் இயங்க வேண்டியது வரும்.'' (குத்பாத்தே தாஹிர் தொகுதி 11 பக்கம் 311)

'' நீங்கள் சீர்திருத்தம் செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். முதல் தேவை நீதியாகும். நீதியில் நிலைபெறுங்கள். பிறகு உங்களிடம் சீர்திருத்தம் செய்பவராகும் மாறும் தகுதி உருவாகும். மேலும் சீர்திருத்தம் செய்பவராக ஆகுங்கள்.......சீர்திருத்தம் செய்யும்போது குழப்பம் அதிகமாகும் வரை எதிர்பார்த்திருக்காதீர்கள். மாறாக, எங்கெங்கெல்லாம் குழப்பத்திற்கான சாத்தியக்கூறுகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதை அடையாளங்களால் அடையாலங் கண்டு கொள்ளுங்கள். அந்த குடும்பங்கள் வரை சென்றடையுங்கள். இளைஞர்கள் வரை சென்றடையுங்கள். அந்த பெரியவர்கள் வரை சென்றடையுங்கள். நீங்கள் ஓடிச் சென்றும் அவர்களைப் பிடிக்க முடியாத அளவுக்கு அவர்களின் காலடிகள் தூரம் சென்று விடுவதற்கு முன்னர் அவர்கள் வரை சென்றடையுங்கள். மேலும் அவர்களை அன்புடன் அரவணைத்து திரும்பக் கொண்டு வாருங்கள். அத்துடன்

நீங்கள் மற்றவர்களை சீர்திருத்துவதன் பக்கம் கவனம் செலுத்தினால் பிறகு உங்கள் மூலமாக சமுதாயங்கள் காப்பாற்றப்படும் என்ற அல்லாஹ்வின் வாக்குறுதி உங்களுக்காக கண்டிப்பாக நிறைவேறும்.'' (குத்பாத்தே தாஹிர் தொகுதி 11 பக்கம் 314)

**ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் வழிகாட்டல்கள்**

4 செப்டம்பர் 2005

## அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் நாடு தழுவிய செயற்குழுவுடன் சந்திப்பு:

தர்பிய்யத் செயலரிடம் ஹுஸூர் அவர்கள், எந்தெந்த சென்டர்களில் தொழுகையில் குறைபாடு உள்ளது? அல்லது முதலில் பள்ளிவாயிலுக்கு வந்து, தற்போது வராதவர்கள் எத்தனை பேர்? அவர்களின் சந்ததிகள் வரவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன? என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிறகு சீர்திருத்தப் பணி நடைபெற வேண்டும் எனக் கூறினார்கள். பிறகு சீர்திருத்தத்திற்கென்று என்ன வழிமுறை என சிந்திக்கப்பட்டு அதில் வெற்றி கிடைக்கவில்லை என்றால் பிறகு எவ்வாறு சீர்திருத்தம் செய்ய முடியும் என்பதைப் பற்றி மேலும் அதிகமாக சிந்தியுங்கள்.

ஹுஸூர் அவர்கள் தர்பிய்யத் செயலரிடம், சோம்பேறிகளாக இருக்கும் நபர்களின் அட்டவணையை எத்தனை ஜமாஅத்துகள் உங்களுக்கு வழங்கி இருக்கின்றன? மேலும் அவற்றை நீங்கள் முரப்பிகளுக்குக் கொடுத்திருக்கிறீர்களா? எனக் கேட்டார்கள். மேலும் அப்படிப்பட்டவர்களின் அட்டவணையே இல்லை என்றால் பிறகு எவ்வாறு வேலை நடக்கும்? என்ன சீர்திருத்த நடவடிக்கை ஏற்படும் என ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: முதலில் அட்டவணையை உருவாக்குங்கள். பிறகு தனிப்பட்ட தொடர்பை வையுங்கள். தொடர்புக்குப் பிறகு அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எத்தனை நபர்களைப் பற்றி முறையீடு இருந்தது? எத்தனை நபர்களுக்கு சீர்திருத்தம்

செய்யப்பட்டுள்ளது? எத்தனை நபர்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைத்துள்ளது? என்ற அறிக்கை முறைப்படி வர வேண்டும். முயற்சி செய்தும் எவர்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்க முடியவில்லையோ அவர்களின் அட்டவணையை எனக்கு அனுப்புங்கள்.''

*(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 14, அக்டோபர் 2005)*

13. செப்டம்பர் 2005

## அஹ்மதிய்யா ஜமாஅத் சுவீடனின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுவுடன் சந்திப்பு

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்கள் சீர்திருத்தக் குழுவையும் சுறுசுறுப்பாக்குங்கள். சீர்திருத்தப் பணி மிகப் பெரும் பணியாகும். எவரை சீர்திருத்துவதிலும் ஒருபோதும் களைப்படைந்து விடக் கூடாது. மாறாக, 4000 முறை கூற வேண்டியது வந்தாலும் கூறுங்கள். களைப்படையக் கூடாது; அவநம்பிக்கை கொண்டு விடக் கூடாது. மென்மையுடன் புரிய வைத்துக் கொண்டே செல்ல வேண்டும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 28, அக்டோபர் 2005)*

9. ஜூன் 2006

## லஜ்னா இமாயில்லாஹ் ஜெர்மனியின் நாடு தழுவிய செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு:

ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள், லஜ்னா தனக்கென்று ஒரு சீர்திருத்தக் குழுவை உருவாக்கலாம் எனக் கூறினார்கள். அதன் உறுப்பினர்கள் நாடு தழுவிய லஜ்னா தலைவி, உள்ளூர் லஜ்னா தலைவி, துணைத் தலைவி, தர்பிய்யத் செயலர், லஜ்னாவின் அநுபவமிக்க உறுப்பினர் ஆகியோராக இருப்பார்கள். ஆனால் இந்தக் குழு லஜ்னாவுடன் தொடர்புடைய பிரச்சனைகளை மட்டுமே சரி செய்யும். ஹுஸூர் அவர்கள்

கூறினார்கள்: சில இடங்களில் ஆண்களும் ஈடுபட்டு விடுகிறார்கள். எப்படி இருப்பினும் அப்படிப்பட்ட விவகாரங்கள் மேலிட சீர்திருத்தக் குழுவிடம் செல்லும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 7, ஜூலை 2006)*

5, மே 2008

## நைஜீரியாவின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு:

ஹுஸூர் அவர்கள் நாடு தழுவிய தர்பிய்யத் செயலரிடம், நாடு தழுவிய அளவிலும், உள்ளூர் அளவிலும் சீர்திருத்தக் குழுக்களை உருவாக்குங்கள் என்று கூறினார்கள். தர்பிய்யத் குழு ஏதாவது வேலை செய்கிறதென்றால் என்ன வேலை செய்கிறது? முறைப்படி சீர்திருத்தக் குழுக்களை உருவாக்குங்கள். தர்பிய்யத் செயலரே (சீர்திருத்தக்) குழுவின் தலைவராவார். **(தற்போது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இந்தியாவுக்கு அமீர்/தலைவர் ஆகியோரையே சீர்திருத்தக் குழுவுக்குத் தலைவராக நியமித்துள்ளார்கள்.)** அதன் உறுப்பினர்களில், பொறுப்பு கொள்கை பரப்புநர், அன்சாருல்லாஹ் தலைவர், குத்தாமுல் அஹ்மதிய்யா தலைவர், லஜ்னாவின் பிரதிநிதி மேலும் (இந்தப் பணிக்குப் பொருத்தமான) ஜமாஅத்தின் ஓர் உறுப்பினர் ஆகியோர் இருப்பர். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: குழுக்களை எல்லா இடத்திலும் உருவாக்குங்கள். நீங்கள் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 11, ஜூலை 2008)*

5, மே 2008

## நைஜீரியாவிலுள்ள ஜமாஅத் முபல்லிகளுடன் சந்திப்பு

சீர்திருத்தக் குழு பற்றி ஹுஸூர் அவர்கள், பிரச்சனை தோன்றிய பிறகு பார்க்க வேண்டும் என்றிருக்கக் கூடாது;

பிரச்சனைக்கு முன்பே நிலைமைகளைப் பற்றி கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும் என வழிகாட்டினார்கள். மேலும் எங்கிருந்து பிரச்சனை உருவாக சாத்தியமிருக்கிறது என்பது தெரிந்திருக்க வேண்டும்....... பிரச்சனை எல்லையை மீறி விடுவதற்கு முன்னர் அதை சீர்திருத்த வேண்டியது அவசியமாகும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 11, ஜூலை 2008)*

7, ஜூன் 2006

## அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

ஹுஸூர் அவர்கள் ஒரு தர்பிய்யத் விஷயத்தின் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள்: உங்கள் கூட்டங்களிலுள்ள விஷயங்களை பாதுகாத்து வையுங்கள். இது மிகவும் அடிப்படையான விஷயமாகும். மஜ்லிஸுகளில் பேசப்படும் விஷயங்கள் அமானிதங்களாகும். எனவே அவற்றிக்கு மதிப்பளிக்க வேண்டும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 7, ஜூலை 2006)*

**பொறுப்பாளர்கள் எல்லா விஷயங்களையும் கண்டும் காணாதிருக்க வேண்டாம்**

‘‘எப்போதும் நோயை அடையாளங்கண்ட பிறகு அதை உடனே பிடியுங்கள். மேலும் அங்கேயே அழித்து விடுங்கள். பொறுப்பாளர்கள் எல்லா விஷயங்களையும் கண்டும் காணாது இருந்து விட வேண்டாம். மாறாக, ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொரு தீமையையும் தடுப்பதற்கு முயற்சி நடைபெற வேண்டும். அதை ஒருபோதும் வளரவோ, பரவவோ விடக்கூடாது. அல்லது குறைந்தது எனக்கு தகவல் தர வேண்டும். அல்லது குத்பாக்களின் மூலமாக நான் அந்தத் தீமையைத் தடுக்க முயற்சி செய்யும் வகையில் குறைந்தது எனக்கு தகவல் தர வேண்டும்.

மேலிட சீர்திருத்தக் குழுவும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் இந்த வழிகாட்டலையே எல்லா உள்ளூர் சீர்திருத்தக் குழுக்களுக்கும் அனுப்புங்கள். அதன் ஒளியில் அவர்கள் தமது ஜமாஅத்துகளில் ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும் எனவும், சீர்திருத்த வேண்டிய எல்லா விஷயங்கள் தொடர்பாகவும் உடனே நடவடிக்கை எடுத்து உங்களுக்கு அதற்கான அறிக்கையை தர வேண்டும் எனவும் அவர்களுக்கு வலியுறுத்துங்கள். திரையிட்டு மறைத்தல் என்பதன் பொருள், எனக்கு கூட அது பற்றிய தகவல் தெரியக் கூடாது என்ற அளவுக்கு தீமையை மறைத்தல் என்பதன்று. பொறுப்பாளர் ஒரு விஷயத்தை மறைக்கின்றார் என்றால் அவர் தனது பொறுப்பில் நம்பிக்கை துரோகம் செய்கிறார். இது தொடர்பாக எனக்கு வரும் அறிக்கைகளிலிருந்து, கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களும், ஜமாஅத்துகளின் பொறுப்பாளர்களும் தமது பொறுப்புகளுக்கான உரிமையை நிறைவேற்றுவதில்லை எனத் தெரிகிறது. சில பெரியவர்களின் தவறுகளை கண்டும் காணாமல் இருப்பதும் சில சிறியவர்களுக்கு உடனே தண்டனை வழங்குவதுமாகிய சிந்தனை காணப்படுகிறது. அப்படிப்பட்ட எல்லா விவகாரங்களையும் இங்கு அனுப்புவது உங்களுடைய வேலையாகும். அடுத்து காலத்தின் கலீஃபா எப்படி விரும்புகிறாரோ தீர்ப்பு வழங்கலாம். அது அவருடைய வேலையாகும்.

சீர்திருத்தத் குழுவின் பணிகள் பற்றி ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய வழிகாட்டல்கள் மற்றும் நான் வழங்கியிருக்கும் வழிகாட்டல்கள் ஆகியவற்றை தொகுத்து ஜமாஅத்துகளுக்கு அனுப்புங்கள். அது மட்டுமின்றி பல்வேறு நாடுகளின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டங்களுக்கும் கிளை அமைப்புகளின் கூட்டங்களுக்கும் அவ்வப்போது நான் வழிகாட்டல்களை வழங்கியுள்ளேன். அவை அல்ஃபஸ்ல் மற்றும் பிற பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அவற்றையும் ஒன்று சேருங்கள். பிறகு அவற்றின் ஒளியில் சீர்திருத்தக் குழுக்கள் உள்ளூர் மற்றும் மேலிட அளவில் பணி செய்ய

வேண்டும்.''

*(ஹுஸூர் அவர்களின் கடிதம் 5-11-2010)*

31, டிசம்பர் 2004

## அஹ்மதிய்யா ஜமாஅத் ஃபிரான்ஸின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: MTAவும் எல்லா வீடுகளிலும் இருக்க வேண்டும். குத்பா கேட்பதன் பக்கம் மட்டும் கவனம் செலுத்துவது போதுமானதாகாது. மாறாக, எவ்வளவு பேர் கேட்டனர்? என்ற முறைப்படியான DATA (விபரம்) உங்களிடம் இருக்க வேண்டும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எந்த வீடுகளில் குத்பா கேட்பதில்லையோ அல்லது அவற்றை கவனத்துடன் கேட்பதில்லையோ அப்படிப்பட்ட வீடுகளில்தான் பெரும்பாலும் சண்டைகள் நடக்கின்றன.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 11, பிப்ரவரி 2005)*

3, மே 2005

## கென்யா நாட்டிலுள்ள குத்தாமுல் அஹ்மதிய்யா கூட்டத்துடன் சந்திப்பு

தர்பிய்யத்தை சான்றாகக் கொண்டு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எல்லா மஜ்லிஸுகளிலும் முறைப்படி தர்பிய்யத் வகுப்புகள் நடைபெற வேண்டும். குத்தாம் சகோதரர்களுக்கு திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுக்க வேண்டும். தொழுகை மற்றும் அதன் மொழியாக்கம் கற்றுக் கொடுக்க வேண்டும். மார்க்க அறிவு இருக்க வேண்டும். தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும். மேலும் உங்கள் தர்பிய்யத் வகுப்புகளில் முபல்லிக்மார்கள், முஅல்லிம்மார்களிடமிருந்து பயன் பெறுங்கள் என்றும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 20, மே 2005)*

3, மே 2005

## கென்யா நாட்டிலுள்ள அன்சாருல்லாஹ் செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

ஹுஸூர் அவர்கள் காயிது தர்பிய்யத் அவர்களுக்கு வழிகாட்டியவாறு கூறினார்கள்: ஒவ்வொரு நாஸிரும் ஐவேளை தொழுகைகளை தொழ வேண்டும். ஜமாஅத்தாகத் தொழ வேண்டும். ஜுமுஆ தொழுகையில் முறைப்படி கலந்து கொள்ள வேண்டும். கலீஃபத்துல் மஸீஹின் குத்பாக்களை முறைப்படி கேட்க வேண்டும். இதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள். எவர்களுக்கு திருக்குர்ஆனைப் பார்த்து ஓதத் தெரியுமோ அவர்கள் நாள்தோறும் தொடர்ந்து ஓதி வரவும். குறைந்தது 2 ருகூ ஓதி வரவும். எவர்களுக்கு திருக்குர்ஆன் பார்த்து ஓதத் தெரியாதோ அவர்களுக்கு சிறப்பு தர்ஸுக்கான நிகழ்ச்சி இருக்க வேண்டும். நல்ல குரலில் ஓதுபவர் இரண்டு ருகூ அவர்களுக்கு ஓதிக் காட்ட வேண்டும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 20, மே 2005)*

27, ஜூன் 2005

## USAன் நாடு தழுவிய அளவிலான குத்தாமுல் அஹ்மதிய்யா கூட்டத்துடன் சந்திப்பு

முஹ்தமிம் தர்பிய்யத்திற்கு ஹுஸூர் அவர்கள் வழிகாட்டியது என்னவென்றால், எந்த குத்தாமுடன் உங்களுக்கு தொடர்பு இல்லையோ அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு திட்டம் தீட்டுங்கள். எந்த குத்தாம் பள்ளிவாயிலுக்கு வருவதில்லையோ, தொடர்பு கொள்வதில்லையோ அவர்களைப் பற்றிய DATA வை (தகவல்களை) சேகரியுங்கள். இவ்வாறு குத்தாமை உங்களுக்கு அருகில் கொண்டு வந்து சேர்த்துக் கொள்ளுங்கள் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் மேலும் கூறினார்கள்: நீங்கள் குத்தாமை பள்ளிவாயிலுக்கு கொண்டு வருவதற்கு Attractionஐ (ஈர்ப்பை) உருவாக்குங்கள். அப்போது ஹுஸூர் அவர்களிடம், நாட்டில் மொத்தம் 60 ஜமாஅத்துகள் இருக்கின்றன என்றும், 40 ஜமாஅத்துகளில் முறைப்படி ஜமாஅத் சென்டர்கள் இருக்கின்றன என்றும் அங்கு விளையாட்டு நிகழ்ச்சிகள் வைக்கப்படுகின்றன என்றும் கூறப்பட்டது.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 12, ஆகஸ்டு 2005)*

5, ஜூலை 2005

## கனடாவின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டம்

ஹுஸூர் அவர்கள் தர்பிய்யத் துறைக்கு வழிகாட்டினார்கள்: MTAவை எத்தனை பேர் கேட்கின்றனர்? எத்தனை பேர் கேட்பதில்லை என ஆய்வு செய்யுங்கள். மேலும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சில அபார்ட்மென்டுகளில் MTA இல்லை. சில இடங்களில் டிஷ் பொருத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அவர்களைப் பற்றியும், அவர்கள் எப்படிக் கேட்கிறார்கள்? அல்லது கேசட்டுகளைப் பார்க்கிறார்களா? என்று ஆய்வு செய்யுங்கள். மேலும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஏதாவது குறிப்பிட்ட தலைப்பாக இருக்குமென்றால், அதை அச்சடித்து வீடுகளுக்கு அனுப்பலாம். வாகனங்களில் செல்பவர்களுக்கு ஆடியோ கேசட் ஆயத்தம் செய்து கொடுக்கலாம்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பள்ளிவாயிலுக்கு வருபவர்களில் இரு வகையினர் இருக்கின்றனர். ஒரு வகையினர் ஒத்துழைப்பு தருபவர்கள்; இன்னொரு வகையினர் பள்ளிவாயிலுக்கு வருகின்றனர்; ஆனால் அவர்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைப்பதில்லை.
ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: மூன்றாவது வகையினர் பள்ளிவாயிலுக்கு வருவதில்லை; அல்லது மிகக் குறைவாக

வருகின்றனர். மேலும் அவர்களுக்கு ஜமாஅத் அமைப்புடன் எந்தத் தொடர்பும் இல்லை. அப்படிப்பட்டவர்களின் தர்பிய்யத்திற்காக அதிகமான நிகழ்ச்சிகளை வைக்க வேண்டும். இவர்கள் அனைவர் மீதும் ஒரே நடவடிக்கை எடுக்க முடியாது. ஒவ்வொருவரின் தர்பிய்யத்திற்காக பல்வேறு தர்பிய்யத் நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும். எனவே உங்கள் தர்பிய்யத் நிகழ்ச்சிகளை அந்த அடிப்படையில் உருவாக்குங்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சில நிகழ்ச்சிகளில் நீங்கள் கிளை அமைப்புகளுடன் சேர்ந்து அவர்களின் ஒத்துழைப்புடன் சிறந்த சூழ்நிலையை உருவாக்க முடியும். அல்லது நிகழ்ச்சிகளில் அவர்கள் உதவிகள் வழங்கினால் சிறந்த சூழ்நிலை உருவாகலாம். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் கிளை அமைப்புகளுக்கு நிகழ்ச்சிகளை உருவாக்கிக் கொடுத்து விடக் கூடாது. (அதாவது கிளை அமைப்புகளுக்கு நிகழ்ச்சிகளை உருவாக்கிக் கொடுத்து விட்டு, அவர்கள் செயல்படுத்திக் கொள்வார்கள் என இருந்து விடக் கூடாது–மொழிபெயர்ப்பாளர்); மாறாக, அவர்களின் நிகழ்ச்சிகளில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

ஹுஸூர் அவர்கள் நாடு தழுவிய தர்பிய்யத் செயலரிடம், சீர்திருத்தக் குழுவின் பணிகளைப் பற்றியும் அறிக்கை கேட்டார்கள். மேலும், இது மிகப் பெரிய வேலையாகும்; பிரச்சனைகள் அதிகமாகின்றன. எனவே இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துங்கள் என்று கூறினார்கள்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 19, ஆகஸ்டு 2005)*

11, செப்டம்பர் 2005

## டென்மார்க்கின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டம்

தர்பிய்யத் செயலருக்கு ஹுஸூர் அவர்கள் வழிகாட்டியவாறு, குடும்பங்களுடன் சொந்த தொடர்பு உருவாகாதவரை–மக்களுடன் தொடர்பு உருவாகாதவரை தர்பிய்யத்திற்கான விளைவுகள் ஏற்பட முடியாது என்று

கூறினார்கள். எவர்களுக்கு ஏற்கனவே ஜமாஅத்துடன் தொடர்பு இருக்கிறதோ அவர்கள்தான் பள்ளிவாயிலுக்கு வருகிறார்கள். எவர்கள் வருவதில்லையோ அவர்களை கொண்டு வருவது எப்படி எனப் பார்க்க வேண்டும். அவர்களுக்காக நிகழ்ச்சிகளை உருவாக்க வேண்டும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அப்படிப்பட்ட மக்களை திருப்பிக் கொண்டு வருவதற்காக செயற்குழு அமர்ந்து சிந்தித்து நிகழ்ச்சிகளை உருவாக்க வேண்டும். மேலும் அதன்படி செயல்பட்டது பற்றிய அறிக்கை வர வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: (டென்மார்க் நாட்டிலுள்ள) உங்களிடம் எண்ணிக்கை குறைவாக உள்ளது. எனவே எவர் பின்தங்கியிருக்கிறாரோ அவர் தென்பட்டு விடுகிறார். அவரைக் கொண்டு வர வேண்டும். அவர்களின் இயல்புக்கேற்ப அவர்களை நெருக்கமாகக் கொண்டு வரும் முயற்சிக்கான நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள். இந்த பலவீனமான குடும்பங்களை எப்படி தம்முடன் இணைப்பது என்ற வகையில் இளைஞர்கள் தமது நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள். லஜ்னா தமது நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பொறுப்பாளர்கள் தம்மைப் பற்றி ஆய்வு செய்யுங்கள். அவர்களின் வீடுகளிலேயே சரியாகி விட்டால் (நல்ல விளைவைத் தரும்). அருள் வீடுகளிலிருந்து உருவாகிறது. உங்கள் வீடுகளிலும் ஆய்வு செய்ய வேண்டும். பள்ளிவாயிலில் உங்கள் மஜ்லிஸுகளின் நிகழ்ச்சிகள் மட்டுமின்றி இளைஞர்களுக்கு ஆர்வமூட்டும் நிகழ்சிகளையும் வையுங்கள். ஏதாவது ஒரு தலைப்பில் கருத்துக்களைக் கூறும் ஏற்பாட்டைச் செய்யுங்கள். Indoor Game க்கான ஏற்பாட்டை செய்யுங்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அறிவுரை கூறலாம். ஆனால் கடுமை காட்ட முடியாது. எனவே அறிவுரை கூறிக்கொண்டே செல்லுங்கள். மேலும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒவ்வோர் அஹ்மதி குழந்தைக்கும் தர்பிய்யத் செய்ய வேண்டும். உங்கள் வீடுகளிலிருந்து தர்பிய்யத்தை ஆரம்பியுங்கள். இணையதளம் நிரந்தர நோயாக

இருக்கிறது. மேலும் தொலைக்காட்சியில் ஒழுக்கத்தைக் கெடுக்கும் நிகழ்ச்சிகள் இருக்கின்றன. பெற்றோர் வீட்டில் நேரத்தை ஒதுக்காவிட்டால் பிள்ளைகள் எல்லாவிதமான சொகுசுகளையும் தேடுகிறார்கள். பிறகு தவறான கூட்டாளி கிடைத்து விடுகிறான். இந்த சமூகத்தில் இருக்க வேண்டுமென்றால் அதிக தியாகங்கள் செய்ய வேண்டியது வரும் என ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வீட்டிலிருந்து தர்பிய்யத் துவங்கும். பெற்றோர் தொழுவார்கள் என்றால், திருக்குர்ஆனை ஓதுவார்கள் என்றால் குழந்தைகளும் தாக்கத்தைப் பெறுவர். அவ்வாறே ª êŒõ ˜. *(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 21, அக்டோபர் 2005)*

14, செப்டம்பர் 2005

## சுவீடன் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

தர்பிய்யத் செயலர் கூறினார்: தொழுகைகளின் வருகையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். எத்தனை குத்தாம் தொழுகிறார்கள்? திருக்குர்ஆன் ஓதுகிறார்கள்? என உங்களுக்குத் தெரிய வேண்டும். பள்ளிவாயிலுக்கு வராதவர்களை அன்புடன் புரிய வையுங்கள். உங்களிடம் எல்லா Data வும் (புள்ளி விபரங்களும்) இருக்க வேண்டும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எவர்கள் உங்கள் பேச்சைக் கேட்பதில்லையோ அவர்களுக்காக வேறு நண்பர்களை நியமியுங்கள். அவர்கள் அவருடன் தொடர்பு கொண்டு அவரை பள்ளிவாயிலுடன் தொடர்பு கொள்ள வைக்க வேண்டும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 28, அக்டோபர் 2005)*

7, ஜனவரி 2006

## இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவுடன் சந்திப்பு

முஹ்தமிம் தர்பிய்யத்திற்கு வழிகாட்டியவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்களின் 800

மஜ்லிஸுகளுக்கு தர்பிய்யத் செய்ய வேண்டும். உங்கள் நிகழ்ச்சிகளைப் பற்றி ஆய்வு செய்யுங்கள். உங்கள் தர்பிய்யத்தின் செயல்முறைத் திட்டம் பற்றி ஆய்வு செய்யுங்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எத்தனை குத்தாம் தொழுகின்றார்கள்? என ஆய்வு செய்யுங்கள். உங்கள் மஜ்லிஸுகளின் அறிக்கையில் தர்பிய்யத் துறையின் கீழ் இது பற்றிய குறிப்பு இருக்க வேண்டும். அறிக்கை வர வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஃபஜ்ர், இஷா தொழுகைகளில் எத்தனை குத்தாம் வருகின்றனர்? மஜ்லிஸுகளிலிருந்து இந்த அறிக்கையையும் வாங்குங்கள். எத்தனை பேர் ஐவேளை தொழுகை தொழுகின்றனர்? எத்தனை பேர் பள்ளிவாயிலுக்கு வந்து தொழுகின்றனர்? எத்தனை பேர் திருக்குர்ஆன் ஓதுகின்றனர்? எத்தனை பேர் வஸிய்யத் அமைப்பில் சேர்ந்துள்ளனர்? உங்களிடன் இந்த எல்லா அறிக்கைகளும் வர வேண்டும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 3, மார்ச் 2006)*

7, ஏப்ரல் 2006

## சிங்கப்பூரின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

தர்பிய்யத் செயலருக்கு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எந்த சகோதரர்கள் பள்ளிவாயிலுக்கு வருகிறார்களோ அவர்களுக்கு தர்பிய்யத்திற்கான நிகழ்ச்சி நடக்கிறதுதான். ஆனால் எவர்கள் வருவதில்லையோ, தொடர்பு கொள்வதில்லையோ அவர்களின் தர்பிய்யத்திற்காக என்ன நிகழ்ச்சி நடக்கிறது? அவர்களின் தர்பிய்யத்திற்காகவும் நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். எவர்களின் முன்னோர்கள் அஹ்மதிகளாக இருந்தார்களோ ஆனால் அவர்களின் சந்ததிகள் தற்போது தொடர்பில் இல்லையோ அவர்களை பள்ளிவாயிலுக்கு கொண்டு வாருங்கள். பிறகு இந்த தொடர்பை நிரந்தரமானதாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 28, ஏப்ரல் 2006)*

8, ஏப்ரல் 2006

## அஹ்மதிய்யா ஜமாஅத் இந்தோனேஷியாவின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

ஹுஸூர் அவர்கள் தர்பிய்யத் செயலரிடம், உங்களிம் ஆண்டு நிகழ்ச்சிகள் என்ன எனக் கேட்டார்கள். தர்பிய்யத்தின் பக்கம் மிக அதிகமாக கவனம் செலுத்துங்கள் எனக் கூறினார்கள்.

நாட்டில் எங்கெல்லாம் நமது பள்ளிவாயில்கள் இருக்கின்றனவோ, சென்டர்கள் இருக்கின்றனவோ அங்கு அஹ்மதிகள் அந்த சென்டர்களிலிருந்து, பள்ளிவாயில்களிலிருந்து எவ்வளவு தூரத்தில் தொலைவில் இருக்கின்றனர் என்று ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள். கிராமங்களில் சென்டர்களுக்கு அருகில்

இருக்கின்றனர்; நகரங்களில் தொலைவில் இருக்கின்றனர்; பல்வேறு தூரத்தில் இருக்கின்றனர் என்று ஹுஸூர் அவர்களிடம் கூறப்பட்டது. எந்த தொழுகையில் மக்களின் வருகை அதிகமாக இருக்கிறது? எத்தனை சதவீத மக்கள் கலந்து கொள்கின்றனர் எனக் கேட்டார்கள். தொழுகையில் வருபவர்களைப் பற்றிய அறிக்கையை முறைப்படி உங்களுக்கு அனுப்புமாறு தர்பிய்யத் செயலருக்கு கூறுங்கள் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். *(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 5, மே 2006)*

18, ஏப்ரல் 2006

## ஆஸ்திரேலியாவின் நாடு தழுவிய அளவிலான குத்தாமுல் அஹ்மதிய்யாவின் செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

முஹ்தமிம் தர்பிய்யத்திடம் ஹுஸூர் அவர்கள்,குத்தாமின் மொத்த எண்ணிக்கையில் எத்தனை பேர் ஐவேளை தொழுகை தொழுகின்றனர்? எத்தனை பேர் ஜமாஅத்தாகத் தொழுகின்றனர்? எனக் கேட்டார்கள். மேலும் மேலிடத்தைத் தவிர தொழுகின்ற மற்ற சென்டர்கள் இருக்கின்றனவா எனவும் ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள். எந்த குத்தாம் பலவீனமாக இருக்கின்றார்களோ, தொழுகைகளுக்கு வருவதில்லையோ அந்த பலவீனமானவர்களை உடன் அழைத்து வருவதற்கென்று உறுதியான குத்தாமை அவர்களுடன் இணையுங்கள். அந்த குத்தாம் அவர்களை தொழுகையாளிகளாக மாற்றுபவர்களாக இருக்க வேண்டும்; அவர்களுடன் தானும் சேர்ந்து தொழாதவர்களாக ஆகி விடக் கூடாது.

ஹுஸூர் அவர்கள் முஹ்தமிம் தர்பிய்யத்திடம், எத்தனை குத்தாம் MTA வில் குத்பா கேட்கின்றனர் எனக் கேட்டார்கள். ஆய்வு செய்த பிறகு ஹுஸூர் அவர்கள், எவர்கள் குத்பா கேட்பதில்லையோ அவர்களுக்காக திட்டம் உருவாக்குங்கள் எனக் கூறினார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள், திருக்குர்ஆன் ஓதும் குத்தாமின் எண்ணிக்கை

எவ்வளவு எனக் கேட்டார்கள். எவர்கள் திருக்குர்ஆன் ஓதுவதில் regularஆக இல்லையோ அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? மாதத்தில் 15 நாட்கள் திருக்குர்ஆன் ஓதுபவர்களின் எண்ணிக்கை எவ்வளவு எனக் கேட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆன் ஓதாதவர்கள் மாதத்தில் 15 நாட்களாவது ஓதுபவர்களாக மாறட்டுமே! அவர்கள் மாதத்தில் 15 நாட்கள் ஓதும்போது நிரந்தமான பழக்கமாக அது அவர்களுக்கு ஆகிவிடும்.

ஹுஸூர் அவர்கள், குத்தாம் சகோதரர்களில் மேலிட செயற்குழு உறுப்பினர்களாக இருப்பவர்களிலும் ஜமாஅத்தாக தொழுபவர்களைப் பற்றி ஆய்வு செய்தார்கள். மேலும் கூறினார்கள்: செயற்குழுவின் எந்த உறுப்பினர் குறைந்தது ஒருவேளை தொழுகை கூட ஜமாஅத்தாகத் தொழவில்லையோ அவர் மற்றவருக்கு என்ன கூறுவார்? ஹுஸூர் அவர்கள், செயற்குழு உறுப்பினர்களிடம் நாள்தோறும் திருக்குர்ஆன் ஓதுபவர்கள் எத்தனை பேர்? எனக் கேட்டார்கள். நாள்தோறும் திருக்குர்ஆன் ஓதும் பழக்கத்தை உருவாக்குங்கள் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். எந்த குத்தாம் தூர விலகிச் சென்றுள்ளார்களோ அவர்களை அவர்களின் நண்பர்களின் மூலமாக அருகில் கொண்டு வர முயற்சி செய்யுங்கள் எனவும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 26, மே 2006)*

18, ஏப்ரல் 2006

## அஹ்மதிய்யா ஜமாஅத் ஆஸ்திரேலியாவின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

தர்பிய்யத் செயலரிடம் ஹுஸூர் அவர்கள், உங்களின் ஆண்டு அளவிலான தர்பிய்யத் நிகழ்ச்சிகள் என்ன? எனக் கேட்டார்கள். எவர்கள் பின்தங்கி விட்டார்களோ அவர்களுக்கு நீங்கள் என்ன தர்பிய்யத் கொடுக்கிறீர்கள்? அவர்களுக்காக என்ன நிகழ்ச்சியை

உருவாக்கியிருக்கிறீர்கள்? அவர்களுடன் தொடர்பு கொள்வது பற்றி என்ன செய்திருக்கிறீர்கள்? எனக் கேட்டார்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒரு தொடர்பு பொறுப்பாளர்கள் என்ற முறையில் இருக்கிறது; இன்னொரு தொடர்பு சகோதரர்,நண்பர் மற்றும் அநுதாபம் என்ற வகையில் இருக்கிறது. அப்படிப்பட்டவர்களை தொடர்பு கொள்வதற்காக முரப்பி அல்லது அமீர், அல்லது தர்பிய்யத் செயலர்தான் செல்ல வேண்டும் என்பது அவசியமில்லை. அப்படிப்பட்ட மக்களை திரும்பக் கொண்டு வருவதற்கு தொடர்பு கொள்வதற்கு யாரை பயன்படுத்தலாம் என்று நீங்கள் பாருங்கள்.

ஹுஸூர் அவர்கள் தர்பிய்யத் செயலருக்கு வழிகாட்டியவாறு கூறினார்கள்: பர்தா என்பது லஜ்னாவின் வேலை மட்டுமன்று. ஆண்களுடைய வேலையுமாகும். இங்கு வந்து சில பெண்கள் பர்தாவை குறைத்து விட்டனர். பொருத்தமற்ற ஆடையில் வந்து விட்டனர். இதில் குற்றம் ஆண்களுடையதாகும் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். ஆண்கள் சுதந்திரமாக அனுமதி வழங்கி விட்டனர். தாமே தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகி விட்டனர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இப்படிப்பட்ட விவகாரங்களில் ஆண்களுக்கு புரிய வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. சந்திப்புகளில் நான் ஆய்வு செய்திருக்கிறேன். (பெண்களாகி)எங்களுடன் (பர்தாவில்) கடைவீதிகளில் செல்வது ஆண்களுக்கு வெட்கமாக இருக்கிறது என்றே (பெண்களில்) பலர் என்னிடம் பதில் கூறினர். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பர்தா (விவகாரம்) கீழ் நோக்கி செல்வதற்கு பதிலாக முன்னேற்றத்தின் பக்கம் செல்ல வேண்டும். நீங்கள் (பெண்களாகிய) அவர்களுக்கு அநுதாபிகளாக இருக்கிறீர்கள் என்ற உணர்வு ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். சமூகத்தில் வீழ்ச்சி ஏற்படக் கூடாது; ஓர் இடத்தில் நிலை கொண்ட பிறகு கால் மேல் நோக்கி செல்ல வேண்டும் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: மனிதனுடைய சிந்தனை நிர்வாணத்தை மறைப்பதன் பக்கம் இருக்கிறது.

ஆடை நாகரிகமாக இருக்க வேண்டும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பாகிஸ்தானிலிருந்து வந்திருக்கின்ற பெண்கள் புர்கா அணிந்தவாறு வந்திருக்கின்றனர். இங்கு வந்து அவர்கள் புர்காவை கழற்றி விடுகின்றனர் என்றால் அவர்களுக்கு, உங்கள் புர்காவை முடித்து விடாதீர்கள் என புரிய வைக்க வேண்டும். மென்மையாக புரிய வையுங்கள். கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எவர்கள் பள்ளிவாயிலுக்கு வருவதில்லையோ அவர்களை பள்ளிவாயிலுக்கு கொண்டு வருவதும் அவசியமாகும். ஒவ்வொரு 6ஆவது குத்பாவும் தர்பிய்யத் பர்றியதாக இருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு 4ஆவது குத்பாவும் பொருள் தியாகம் மற்றும் இறைவணக்கம் பற்றியதாக இருக்க வேண்டும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 26, மே 2006)*

3, மே 2006

## அஹ்மதிய்யா ஜமாஅத் ஃபிஜியின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

தர்பிய்யத் செயலரிடமிருந்து அவர்களின் நிகழ்ச்சிகளைப் பற்றி ஆய்வு செய்தவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஜமாஅத்தாக தொழுவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். எத்தனை பேர் வருகின்றனர்? ஐவேளை தொழுகைகளில் எவ்வளவு வருகை இருக்கிறது? என்பதைப் பற்றி நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும். தொழுகைகளின் வருகையை அதிகமாக்குங்கள். முதலில் தொழுகைகளில் வந்து இப்போது வராதவர்களின் காரணம் என்ன என்பதைக் கண்டறியுங்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எல்லா ஜமாஅத்துகளிலும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. நீங்கள் இது தொடர்பாக செய்யும் முயற்சிகளுக்கு ஜமாஅத்துகளில் என்ன விளைவு ஏற்பட்டது என்பது பற்றி உங்களுக்கு எதுவும் தெரியவில்லை என்றால் நீங்கள் உங்களின் எதிர்கால நிகழ்ச்சியை உருவாக்க முடியாது.ஹுஸூர்

அவர்கள் கூறினார்கள்: ஒரு மிகப் பெரிய வேலை திருக்குர்ஆனை ஓதுவதாகும். எத்தனை பேர் நாள்தோறும் திருக்குர்ஆனை ஓதுகின்றனர்? என ஆய்வு செய்ய வேண்டும். இதுவும் தர்பிய்யத் செலயரின் வேலையாகும். திருக்குர்ஆனை ஓதும்போதுதான் என்ன வேலைகளைச் செய்ய வேண்டும்? என்ன விஷயங்களிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது என தெரிய வரும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சீரத்துந் நபி கூட்டங்களில் மற்றவர்களையும் அழையுங்கள். ஒவ்வொரு ஜமாஅத்திலும் எத்தனை பேர் தொழுவதில்லை; வீடுகளிலும் தொழுவதில்லை என ஆழமாகச் சென்று ஆய்வு செய்ய வேண்டியது வரும். அவர்களைப் பற்றி ஆய்வு செய்யுங்கள். பிறகு அவர்களின் தர்பிய்யத்திற்காக நிகழ்ச்சிகளை ஆயத்தம் செய்யுங்கள். எவர் வீட்டில் தொழுவதில்லையோ அவரை வீட்டிலாவது தொழ வையுங்கள். இது முரப்பிகள் மற்றும் தர்பிய்யத் செயலர்களின் வேலையாகும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஜமாஅத்தின் பெண்களுக்கும் தர்பிய்யத்தின் பக்கம் கவனம் இல்லை. சில பெண்களுக்கு தொழுகைகளைப் பற்றித் தெரியாவிட்டால் அவர்கள் தம் குழந்தைகளுக்கு என்ன கற்றுக் கொடுக்கப் போகிறார்கள்? தாய் தனது குழந்தைக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும். தந்தை தனது வேலை தொடர்பாக வீட்டிற்கு வெளியே இருக்கிறார். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: மேலிட மாநாடுகளில் தர்பிய்யத் தொடர்பான நிகழ்ச்சிகளும் தலைப்புகளும் இருக்க வேண்டும். ஆண்கள் தாமும் தொழ வேண்டும். தமது பெண்களுக்கும் தொழ வைக்க வேண்டும். பிள்ளைகளுக்கும் தொழ வைக்க வேண்டும். தாமும் திருக்குர்ஆன் ஓத வேண்டும். வீடுகளில் அவர்களின் பெண்களும் திருக்குர்ஆன் ஓத வேண்டும். அவர்களின் குழந்தைகளும் திருக்குர்ஆனை ஓத வேண்டும்.ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இங்கு (ஃபிஜியில்) தர்பிய்யத்தின் மிகப் பெரிய பிரச்சனை இருக்கிறது. கணவன் மனைவி ஒருவருக்கொருவருடன் உள்ள தொடர்புகள் சரியாக வேண்டும். திருமணங்கள் நடக்கின்றன. பிறகு தனிமையாகி விடுகிறார்கள்.

தர்பிய்யத்தின் இந்த பிரச்சனைகள் இருக்கின்றன; இவற்றிக்கு தீர்வு காண வேண்டும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒருவருக்கு தண்டனை கிடைக்கும்போது அது பற்றி அறிவிப்பு செய்யும்போது அவருக்கு வெட்கம் ஏற்படுகிறது. இவையெல்லாம் தர்பிய்யத்தின் பிரச்சனைகளாகும். இவை அமீர், முபல்லிக்மார்கள், எல்லா தர்பிய்யத் செயலர்களின் பணியாகும். தர்பிய்யத் நடந்தால் பிறகு தவறுகளும் நடக்காது; வெட்கப்பட வேண்டிய தேவையுமிருக்காது.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 16, ஜூன் 2006)*

7, மே 2006

**நியூசிலாந்து அன்சாருல்லாஹ்வின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு**

ஹுஸூர் அவர்கள் காயிது தர்பிய்யத்திடம், உங்களின் திட்டம் மற்றும் நிகழ்ச்சி என்ன என்று கேட்டார்கள். எத்தனை அன்சார் ஜமாஅத்தாகத் தொழுகின்றனர்? எத்தனை பேர் நாள்தோறும் திருக்குர்ஆன் ஓதுகின்றனர்? எத்தனை பேர் தமது குழந்தைகளின் தர்பிய்யத்தின் பக்கம் கவனம் செலுத்துகின்றனர்? என்பது பற்றி உங்களிடம் முறைப்படி பதிவேடு இருக்க வேண்டும் என்று கூறினார்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: வீடுகளில் மார்க்கம் தொடர்பான விஷயங்களைப் பேச வேண்டும்; ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விஷயங்களைப் பேச வேண்டும்; அவர்களின் நூல்களைப் படிக்க வேண்டும் என்பதன் பக்கம் அன்சாருக்கு கவனம் செலுத்துங்கள். வீடுகளில் மார்க்கச் சூழல் இருக்க வேண்டும். குழந்தைகள் தொழ வேண்டும் திருக்குர்ஆனை ஓத வேண்டும். அன்சார் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்கள் புதிய தலைமுறையைக் காப்பாற்ற வேண்டுமென்றால் நீங்கள் அவர்களுடைய தஃலீம் தர்பிய்யத்திற்காக திட்டங்களை வகுக்க வேண்டியது வரும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 30, ஜூன் 2006)*

7, மே 2006

## நியூசிலாந்து குத்தாமுல் அஹ்மதிய்யாவின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

ஹுஸூர் அவர்கள் தர்பிய்யத் செயலரிடம் அவர்களின் துறையின் கீழ் நடக்கும் பணிகள் தொடர்பாக கேட்டார்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எத்தனை குத்தாம் ஐவேளை தொழுகைகளை தொழுகிறார்கள்? எத்தனை குத்தாம் ஜமாஅத்தாக தொழுகிறார்கள்? எத்தனை குத்தாம் திருக்குர்ஆன் ஓதுகின்றார்கள்? மேலும் எத்தனை குத்தாம் நாள்தோறும் திருக்குர்ஆன் ஓதுகின்றனர்? என்பது உங்களுக்குத் தெரிய வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: உண்மையான விஷயம், தொழுங்கள்; திருக்குர்ஆன் ஓதுங்கள் என்பதாகும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தர்பிய்யத்திற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து பல்வேறு தலைப்புகளில் மேற்கோள்களைத் தேர்ந்தெடுத்து குத்தாமுக்குக் கொடுங்கள். பெற்றோரின் உரிமைகள், அண்டை வீட்டினரின் உரிமைகள், பொதுத் தொண்டு செய்வது, தொழுவது, திருக்குர்ஆன் ஓதுவது, பொருள் தியாகம், உண்மை பேசுவது, கோபப்படாதிருப்பது, நேர்மையாக இருப்பது ஆகியவை. இவ்வாறு பல தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து குத்தாமுக்குக் கொடுங்கள். தர்பிய்யத் கூட்டங்களில் படிக்கட்டும். மேலும் அவர்களின் மார்க்கப் பாடத் திட்டத்திலும் வையுங்கள்.

ஹுஸூர் அவர்கள் முஹ்தமிம் தர்பிய்யத்துக்கு அறிவுறுத்தியவாறு, முதலில் எத்தனை குத்தாமுக்கு சாதாரண தொழுகையும், தொழுகை பொருளுடனும் தெரியும்? திருக்குர்ஆன் தெரியும்? என்ற எல்லா ஆய்வுகளையும் ஆயத்தம் செய்யுங்கள். இந்த ஆய்வு ஆயத்தமான பிறகுதான் நீங்கள் தர்பிய்யத் செய்ய முடியும்;

சிறந்த நிகழ்ச்சியை உருவாக்க முடியும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சில ஆண்கள் அஹ்மதியல்லாத பெண்களை திருமணம் செய்து கொள்கின்றனர். அவ்வாறே சில அஹ்மதி பெண்களும் வெளியே திருமணம் செய்து கொள்கிறார்கள். இரு நிலைகளிலும் சந்ததிகள் வீணாகி விடுகின்றனர். எனவே தர்பிய்யத் துறை அதிக சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எல்லா ஈடுபாடுகள் இருந்த போதிலும் ஐந்து தொழுகைகள் தொழுதே ஆக வேண்டும். எவர் ஐவேளை தொழுவாரோ அவருக்கு தர்பிய்யத் கிடைத்து விடும். எவர் திருக்குர்ஆன் ஓதுவாரோ அவருக்கும் தர்பிய்யத் கிடைத்து விடும். அவ்வாறே எவர் உங்களுடைய கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்வாரோ அவருக்கும் பள்ளிவாயிலுடன் தொடர்பு ஏற்பட்டு விடும்; அவருடைய தர்பிய்யத்தும் ஏற்பட்டு விடும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: மாதத்தில் திருக்குர்ஆன், ஹதீஸ், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள் ஆகியவற்றைக் கொண்ட ஒன்றிரண்டு பிரசுரங்களை வெளியிட்டு குத்தாமுக்குக் கொடுங்கள். அதில் பல்வேறு தலைப்புகளில் தர்பிய்யத் கட்டுரைகளும் இருக்க வேண்டும். அதற்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து மேற்கோளையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எந்த குத்தாம் பின்தங்கியுள்ளாரோ, எவருடன் தொடர்பு இல்லையோ அவரை ஏதாவது நண்பர் மூலமாக நெருக்கமாக கொண்டு வாருங்கள். பொறுப்பாளரே சென்று அவருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. அவர் ஜமாஅத்தின் அமைப்பில் இணைய வேண்டும் என்பதும் பள்ளிவாயிலுடன் அவருக்கு தொடர்பு ஏற்பட வேண்டும் என்பதுமே உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தியாகம் செய்யாமல் உலகில் எந்த முன்னேற்றமும் கிடைக்க முடியாது. உங்களுக்கு தியாகம் செய்ய வேண்டியது வரும்.

நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள்; மேலும் வேலை செய்யுங்கள். எவ்வாறு செய்வது என்பது பற்றி செயற்குழுக் கூட்டம் ஒன்று சேர்ந்து சிந்தித்து, அதற்கு தீர்வு காண வேண்டும்.தொடர்ந்து தொடர்பு வைக்க வேண்டும். முதல் விஷயம், இறைவனுடன் தொடர்பை உருவாக்குவதும், தொழுகைக்கான பழக்கத்தை உருவாக்குவதும், திருக்குர்ஆன் ஓதும் பழக்கத்தை ஏற்படுத்துவதுமாகும்.
*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 30, ஜூன் 2006)*

7, மே 2006

## நியூசிலாந்தின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

தர்பிய்யத் செயலர் கூறினார்: மாதத்தில் ஒரு தர்பிய்யத் கூட்டம் நடக்கிறது. ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: உங்களுடைய கூட்டங்களில் வராதவர்களுக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்? தர்பிய்யத் செயலர், நாங்கள் வீடுகளுக்கு செல்கிறோம். கவனமூட்டுகிறோம். தொழுகிறார்களா? என்றும் ஹுஸூர் அவர்களின் குத்பாக்களை கேட்கின்றார்களா என்றும் ஆய்வு செய்கிறோம் என்று தர்பிய்யத் செயலர் கூறினார். இவ்வாறு சிலர் கூட்டங்களில் வரத் துவங்கியுள்ளனர். தொழுகைகளுடன் திருக்குர்ஆன் ஓதுவது பற்றியும் ஆய்வு செய்யுங்கள் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். அவ்வாறே டிஷ் பொருத்தப்படுள்ளது. எத்தனை பேர், குடும்பங்கள் குத்பாக்களைக் கேட்கின்றனர் என்பதை ஆய்வு செய்யுங்கள். எத்தனை பேர் குத்பாக்களைக் கேட்டனர்? மற்ற நிகழ்ச்சிகளைக் கேட்டனர் என்ற அறிக்கை ஒவ்வொரு மாதமும் உங்களுக்கு வர வேண்டும்.
*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 30, ஜூன் 2006)*

13, மே 200613,

## ஜப்பானின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்துடன் சந்திப்பு

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு மாதமும் தர்பிய்யத் விஷயமாக குறிப்பாக தொழுகைகள் பற்றி ஒரு கூட்டம் நடைபெற வேண்டும். தொழுகைகள் பற்றி ஜமாஅத்துகள் என்ன கவனம் செலுத்தியது? என்ன முயற்சி செய்ததோ அதற்கு என்ன விளைவு ஏற்பட்டது? என்பது பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் முபல்லிகுகளுக்கு அறிவுறுத்தியவாறு கூறினார்கள்: உங்களின் ஒவ்வொரு நான்கில் ஒரு குத்பா தர்பிய்யத் பற்றி இருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு ஆறாவது குத்பாவும் பொருள் தியாகம் பற்றி இருக்க வேண்டும்.MTA வில் எத்தனை பேர் குத்பாக்களை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்? என்பது பற்றி அறிக்கை வாங்குங்கள்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 30, ஜூன் 2006)*

**இது தொடர்பாக 2012 ஆம் அண்டில் ஹுஸூர் அவர்களிடமிருந்து நாஸிர் சாஹிப் அஃலா அவர்களின் பெயரில் வந்த வழிகாட்டலில் இந்தியாவின் எல்லா ஜமாத்துகளிலும் நியமிக்கப்பட்டுள்ள முஅல்லிம்கள், முபல்லிகுகள் ஒவ்வொரு ஜுமுஆ குத்பாவிலும் காலத்தின் கலீஃபா அவர்களின் சென்ற வார ஜுமுஆவின் குத்பாவையே வாசித்துக் காட்ட வேண்டும் என்ற வழிகாட்டலை அனுப்புமாறு கட்டளை வந்துள்ளது.(கடித எண்:QND3307/29.08.12)**

7, ஜூன் 2006

## அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டம்

கூட்டத்தில் ஹுஸூர் அவர்கள் சில துறைகளைப் பற்றி ஆய்வு செய்தவாறு பல்வேறு தர்பிய்யத் மற்றும்

அமைப்பு வகையிலான விஷயங்கள் பற்றி விலைமதிக்கத்தக்க அறிவுரைகளைக் கூறினார்கள். மேலும் பலவீனங்களை நீக்குவதன் பக்கம் கவனமூட்டினார்கள். ஹுஸூர் அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றின் சுருக்கம் கீழே தரப்படுகின்றன:

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பொறுப்புகளை தொண்டாகக் கருதி நிறைவேற்றுங்கள். (தன்னைப் பற்றி) மேலதிகாரி என்பதற்கு பதிலாக தொண்டாற்றுபவன் என்ற சிந்தனையை உள்ளத்தில் நிலைநாட்டுங்கள். இது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் ‘மீர் தாவூது அஹ்மது சாஹிப்’ அவர்களின் உதாரணத்தைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் தமது அஃப்சர் ஜல்ஸா சாலானா என்ற டைட்டிலை மாற்றி விட்டு காதிம் ஜல்ஸா சாலானா என எழுத வைக்க ஆரம்பித்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் பொறுப்பாளர்களுக்கு எதிரான முறையீடுகள் பற்றி ஆய்வு செய்யும் முறை பற்றி புரியவைத்தவாறு கூறினார்கள்: அப்படிப்பட்ட முறையீடுகள் பற்றி கமிட்டிகளை உருவாக்குவதற்கு பதிலாக பொறுப்பாளர்களிடம், கடிதம் மூலமாக இரகசியமான முறையில் நீங்கள் இதில் ஈடுபடவில்லையே எனக் கேட்க வேண்டும். பிறகு பொறுப்பாளர்கள் தம்மைப் பற்றி ஆய்வு செய்யும்போது முறையீட்டின் கீழ் அவர்கள் வருகிறார்கள் என்றால், அவர்களின் அல்லது அவர்களின் சந்ததிகளின் ஏதாவது செயலின் காரணமாக ஜமாஅத்தின் கண்ணியத்திற்கு அதிர்ச்சி ஏற்படாதிருப்பதற்காக அவர்கள் தம்மை சீர்செய்ய வேண்டும். முயற்சி செய்தும் அவர்கள் தம்மிடமும் தமது வீட்டிலும் எந்த சீர்திருத்தமும் செய்ய முடியவில்லை என்றால், பிறகு இறையச்சம் எதிர்பார்ப்பது என்னவென்றால், நீங்கள் உங்களை இந்தத் தொண்டிலிருந்து விலக்கி விடுங்கள். ஹுஸூர் அவர்கள் அந்தஸ்துக்கேற்ப நடந்து கொள்ளுமாறும் குறிப்பாக கவனமூட்டினார்கள். மேலும் உங்களை விட மேலாக இருக்கும் அதிகாரிகளுக்கு கண்ணியமளிப்பதும் அவர்களுக்குக் கட்டுப்படுவதும் மிகவும் அவசியமாகும். உங்களுக்கு உங்கள் மேலதிகாரியிடமிருந்து ஏதாவது

தொண்டு ஒப்படைக்கப்படுகிறதென்றால் அவருக்கு உங்களுடன் முறையீடு இருக்கிறதென்றால், முதலில் கட்டுப்பட்டவாறு அந்த வேலையைச் செய்ய வேண்டும். பிறகு பொறுப்பாளரிடம், நீங்கள் இந்த விஷயத்தை தவறாகக் கூறினீர்கள் என நான் மேலிடத்திடம் அல்லது காலத்தின் கலீஃபாவிடம் முறையிடுவேன் எனக் கூறுங்கள்.

ஹுஸூர் அவர்கள் பொறுப்பாளர்கள் தமது சிறந்த முன்மாதிரியைக் காட்ட வேண்டும் என்றும் அறிவுரை கூறினார்கள். சில நேரத்தில் பொறுப்பாளர்களின் வீடுகளில் முன்மாதிரி சரியாக இருப்பதில்லை. தமது மருமகள்களிடம், மருமகன்களிடம், குழந்தைகளிடம், மனைவியரிடம் சண்டைகள் நடக்கின்றன. அப்படிப்பட்ட பலவீனங்களையும் நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உங்களால் செய்ய முடியாவிட்டால் பிறகு உங்களை நீங்களே ஜமாஅத்தின் தொண்டிலிருந்து நீக்கி விடுங்கள். ஹுஸூர் அவர்கள் நன்மையான விஷயங்களில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அறிவுறுத்தியவாறு, எல்லாருடைய நோக்கமும் ஒன்றுதான். ஒன்று சேர்ந்து வேலை செய்யுங்கள் என்றார்கள். கிளை அமைப்புகள் ஜமாஅத் அமைப்பை உறுதிப்படுத்துவதற்கு வழிகோலாக அமைகிறது.

ஹுஸூர் அவர்கள் ஒரு தர்பிய்யத் விஷயத்தின் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள்: **உங்கள் கூட்டங்களில் பேசப்படும் விஷயங்களை பாதுகாத்து வையுங்கள் என்று கூறினார்கள். இது மிகவும் அடிப்படை விஷயமாகும். கூட்டங்களில் பேசப்படும் விஷயங்கள் அமானிதங்களாகும். எனவே அவற்றைப் பொருட்படுத்த வேண்டும்.**

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 7, ஜூலை 2006)*

9, ஜூன் 2006

## ஜுமுஆ பேருரையில் பொறுப்பாளர்களுக்கு வழிகாட்டல்கள்

''அவ்வாறே அமீர்மார்கள், மேலிட பொறுப்பாளர்களுக்கும் நான் கூறுகிறேன்: ஜமாஅத்தின்

ஒத்துழைப்பு மற்றும் கட்டுப்படுதல் ஆகியவற்றின் தகுதி உயர வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள் என்றால் உள்ளத்தின் துடிப்புடன் நாடித் துடிப்பு செல்வதைப் போன்று காலத்தின் கலீஃபாவின் தீர்ப்புகளை செயல்படுத்துவதில் நடந்து கொள்ளுங்கள். இந்த தகுதியைப் பெறுவீர்கள் என்றால் ஒரு சாதாரண அஹ்மதி எப்படி கட்டுப்படுகிறார் என்று பிறகு பாருங்கள்.....

எனவே எல்லா வட்டத்திலும் உள்ள பொறுப்பாளர்கள் – அவர்கள் உள்ளூர் செயற்குழு உறுப்பினராக இருந்தாலும் அல்லது ஜமாஅத்தின் தலைவராக இருந்தாலும், மண்டல அமீராக இருந்தாலும் அல்லது மேலிட செயற்குழு உறுப்பினராக இருந்தாலும் அல்லது ஜமாஅத்தின் அமீராக இருந்தாலும் தன்னை, தனது மன இச்சைகளை, 'தான்' என்ற அகந்தையை பலியிட்டு விடுங்கள் என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்கேற்ப உங்கள் சிந்தனையைக் கொண்டு வாருங்கள்.........

இங்கு முரப்பிகள், முபல்லிகுகள் ஆகியோருக்கு நான் இன்னொரு விஷயத்தின் பக்கமும் கவனமூட்ட விரும்புகிறேன்......அமீரிடம் அல்லது பொறுப்பாளரிடம் ஜமாஅத்தின் மரபுகளுக்கு எதிரான ஏதாவது விஷயத்தைக் கண்டால் பொறுப்பாளர்களுக்கு, அமீருக்கு தனிமையில் கவனமூட்டுங்கள்..........அதற்குப் பிறகும் அந்த அமீர் அல்லது பொறுப்பாளர் தனது விஷயத்தில் அழுத்தம் கொடுக்கிறார் என்றால், மேலும் அது ஜமாஅத்தின் பயனுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது என நீங்கள் கருதினால் பிறகு காலத்தின் கலீஃபாவுக்கு தெரியப்படுத்துங்கள். ஆனால் ஜமாஅத்தில் முரப்பிக்கும் அமீருக்கும் சரியான புரிதல் இல்லை அல்லது ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதில்லை என்ற தாக்கம் ஒருபோதும் ஜமாஅத்தில் பரவக் கூடாது.

இரண்டாவது முரப்பிகள் இன்னொன்றையும் கவனத்தில் வைக்க வேண்டும். அதாவது, முரப்பியைப் பற்றி ஜமாஅத்தின் எந்தவொரு நபருக்கும், இந்த முரப்பி அல்லது முபல்லிகுக்கு இந்த நபருடன் அதிக நெருக்கமான தொடர்புகள் இருக்கின்றன என்ற தாக்கம் உருவாகக்

கூடாது.......முரப்பி அல்லது முபல்லிக் அல்லது எந்தவொரு மேலிடத்து பொறுப்பாளராக இருந்தாலும் அவருடைய வேலை, தன்னை எல்லா விருப்பத்தையும் விட மேலாக சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எல்லா தொடர்புகளையும் புறந்தள்ளி விட்டு ஜமாஅத்தின் பயனுக்காக வேலை செய்வதாகும்.''

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 30, ஜூன் 2006)*

9, ஜூன் 2006

## ஜெர்மனியின் நாடுதழுவிய அளவிலான லஜ்னா இமாயில்லாஹ்வுடன் சந்திப்பு

ஹுஸூர் அவர்கள் மீண்டும் ஒருமுறை பர்தாவின் தேவையைப் பற்றி அழுத்தமாகக் குறிப்பிட்டவாறு கூறினார்கள்: நீங்கள் பெண்களிடம், அல்லாஹ்வின் கட்டளை என்பதால் நீங்கள் பர்தா அணிகிறீர்கள் என்ற விஷயத்தை அவர்களின் சிந்தனையில் இட வேண்டும்.ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஜமாஅத்தின் மரபுகளில் நிலைத்திருப்பீர்கள் என்றால் எந்த தாழ்வு மனப்பான்மையும் இருக்காது. பிறகு இதிலிருந்தே தப்லீகிற்கான வழியும் திறக்கும். மேலும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சில பெண்கள் பாகிஸ்தானிலிருந்து திருமணமாகி இங்கு (ஜெர்மனிக்கு) வருகின்றனர். (பாகிஸ்தானாகிய) அங்கு அவர்கள் புர்கா அணிகின்றனர். ஆனால் இங்கு வந்ததுமே கழற்றி விடுகின்றனர். இது வெட்கத்திற்கு புறம்பான செயலாகும் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். இது சொந்த தாழ்வு மனப்பான்மையின் காரணமாகவும் இருக்கலாம்; கணவன் கூறியதனாலும் இருக்கலாம். ஜெர்மன் பெண்கள் அஹ்மதி ஆன பிறகு நல்ல ஆடையில் வர முடியுமென்றால் அவர்கள் முழு பர்தாவை பேணுவதில் என்ன தவறு இருக்கிறது? ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இன்று text message ன் பழக்கம் தோன்றி விட்டது. இதுவும் தெரிந்தவர்களைத் தவிர வேறு யாருக்கும் அனுப்பக் கூடாது. சில நேரத்தில் தோழிகள் அடுத்து கைப்பேசி

எண்ணைக் கொடுத்து விடுகின்றனர. எனவே இதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 7, ஜூலை 2006)*

10, ஜூன் 2006

## ஜெர்மனியிலுள்ள குத்தாமுல் அஹ்மதிய்யாவின் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டத்தில் காயிதுகள், மண்டல காயிதுகள் ஆகியோருடன் சந்திப்பு

ஹுஸூர் அவர்கள் தர்பிய்யத் முஹ்தமிம் அவர்களிடம், குத்தாமிடம் ஏற்படுகின்ற சண்டைகளை நீக்குவதற்கு அறிவுரை கூறிக் கொண்டிருங்கள் எனக் கூறினார்கள். பலர் வெளிப்படையில் நல்லவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தமது வீட்டில் நிலைமையை மோசமாக வைக்கிறார்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எவருக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டுமோ அவருடைய நல்ல நண்பரை தேடிக் கண்டு பிடித்து அவர் மூலமாக அவரை சீர்திருத்த முயற்சி செய்யுங்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இதன் நோக்கம் சீர்திருத்தம் உருவாக வேண்டும்; அவர்களை ஜமாஅத் அமைப்புடன் இணைக்க வேண்டும் என்பதாகும்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 7, ஜூலை 2006)*

14, ஜூன் 2006

## ஜெர்மனியிலுள்ள அன்சாருல்லாஹ்வின் நாடு தழுவிய அளவிலான சந்திப்பு

ஹுஸூர் அவர்கள் தர்பிய்யத் மற்றும் தஃலீமுல் குர்ஆன் பற்றி ஆய்வு செய்தவாறு, முதலில் பள்ளிவாயில்கள், தொழும் சென்டர்களின் எண்ணிக்கை எவ்வளவு எனப் பாருங்கள். பிறகு எத்தனை மஜ்லிஸுகளில் ஜமாஅத் அளவிலான தொழுகைக்கு ஏற்பாடு இருக்கிறது என்று பாருங்கள். மேலும் ஒவ்வோர் இடத்திலும் குறைந்தது இரண்டு தொழுகைகள்

ஜமாஅத்தாக தொழப்பட வேண்டும். ஹுஸூர் அவர்களிடம், மார்ச் மாதத்தில் நாங்கள் தர்பிய்யத் வாரம் கொண்டாடினோம். மேலும் ஏப்ரல் மாத அறிக்கையிலிருந்து,தொழுகையை நிறைவேற்றுகின்றவர்கள், திருக்குர்ஆன் ஓதுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது என்பது தெரிய வந்துள்ளது எனக் கூறப்பட்டது. ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இப்போது மீண்டும் அறிக்கை வாங்குங்கள். இந்த மாற்றம் தர்பிய்யத் வாரத்தில் மட்டும்தான் இருந்ததா? அல்லது பின்னரும் தொடர்கிறதா எனப் பாருங்கள். அன்சார், குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்க வேண்டும் என்பதைப் பற்றி ஹுஸூர் அவர்கள் கவனமூட்டியவாறு, ஸஃபே தோம் (இரண்டாம் குழுவைச் சேர்ந்த) அன்சாரின் பெரும்பாலான குழந்தைகள் சிறுவர்களாக இருக்கிறார்கள். குழந்தைகள் நல்ல பண்புடையவர்களாக மாறுவதற்காக அவர்களுக்கு நல்ல தர்பிய்யத் கொடுங்கள். அமீர் சாஹிப் அவர்களின் விண்ணப்பத்திற்கேற்ப ஹுஸூர் அவர்கள் மீண்டும் ஒருமுறை அடுத்த தலைமுறையை ஜமாஅத் அமைப்புடன் தொடர்புள்ளவர்களாக வைத்திருப்பதற்காக குழந்தைகளின் தர்பிய்யத்தின் மீது குறிப்பான கவனம் செலுத்துமாறு அன்சாருக்கு அறிவுரை வழங்கினார்கள்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 14, ஜூலை 2006)*

5, மே 2008

## USA ன் நாடு தழுவிய அளவிலான செயற்குழுக் கூட்டம்

தர்பிய்யத் செயலரிடம் ஹுஸூர் அவர்கள், தர்பிய்யத்திற்கென்று சிறப்பு நிகழ்ச்சி என்ன என்று கேட்டார்கள். செயலர் கூறினார்: தர்பிய்யத் கருத்தரங்கின் தொடர் நிகழ்ச்சி இருக்கிறது. ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஜமாஅத்துகளில் உங்கள் தர்பிய்யத் செயலர் சுறுசுறுப்பாக இருந்தால் நீங்கள் எளிதாக அதன்

விளைவைப் பெறலாம். உங்கள் தர்பிய்யத் செயலர்களை சுறுசுறுப்பாக்குங்கள்.

தர்பிய்யத் செயலர் நாடு தழுவிய அளவிலான சீர்திருத்தக் குழுவின் பணிகள் தொடர்பாகக் கூறினார். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சென்டர்களிலும் ஜமாஅத்துகளிலும் சீர்திருத்தக் குழு சுறுசுறுப்பாகி விட்டால் தற்போது அதிகமாக நடக்கும் **Matrimonial** (திருமணம் தொடர்பான) பிரச்சனைகள் இருக்காது.

சீர்திருத்தக் குழுவில் சென்ற ஆண்டுகளில் என்ன பிரச்சனைகள் வந்தனவோ மேலும் இந்த ஆண்டில் என்ன பிரச்சனைகள் வந்துள்ளனவோ அந்த எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா? என ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள். ஹுஸூர் அவர்களிடம் அறிக்கை எடுத்துக் கூறியவாறு, வருகின்ற பிரச்சனைகள் அபாயகரமானவையாக இருக்கின்றன; கவலைக்குரியவையாக இருக்கின்றன; ஒவ்வொரு மாதமும் வருகின்றன எனக் கூறப்பட்டது. ஹுஸூர் அவர்கள், சில பிரச்சனைகள் உமூரே ஆம்மா, முபல்லிக்மார்களுக்குத் தெரியும். இது தொடர்பாக முழுமையான தகவல்களைப் பெறுங்கள் என்று கூறினார்கள்.

*(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் 15, ஆகஸ்டு 2008)*

✱✱✱✱

## சீர்திருத்தம் மற்றும் தர்பிய்யத்திற்கான நான்கு அடிப்படையான வழிமுறைகள்

இந்திய ஜமாஅத் உறுப்பினர்களின் தர்பிய்யத் தொடர்பாக மதிப்பிற்குரிய வகீல் சாஹிப் தஃமீலோ தன்ஃபீஸ் அவர்கள் ஹுஸூர் அவர்களின் கீழ்வரும் வழிகாட்டலை அனுப்பியிருக்கிறார்கள். அதில் **ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:**

''ஜமாஅத் அளவில் என்ன தீர்ப்புகள் கொடுக்கப்படுகின்றனவோ அவற்றிற்கு உடனே கீழ்ப்படிகின்ற, கட்டுப்படுகின்ற முன்மாதிரி தென்பட வேண்டும். ஆனால் கடந்த 25 ஆண்டுகளாக காதியான் மக்களிடம் இந்த முன்மாதிரி தென்படவில்லை......இது, உங்களில் எவரும் தமது தர்பிய்யத் விஷயத்தில் தமது பொறுப்புகளை நிறைவேற்றவில்லை என்பதை பிரதிபலித்துக் காட்டுகிறது. நஸாரத் இஸ்லாஹோ இர்ஷாதும், சதாரத்தே உமூமீயும், குத்தாமுல் அஹ்மதிய்யாவும் தமது பொறுப்புகளை நிறைவேற்றவில்லை; அவர்களிடம் கீழ்ப்படிதல், கட்டுப்படுதல் ஆகியவற்றின் உணர்வை உருவாக்கவில்லை. அல்லாஹ் உங்களின் நிலைமை மீது கருணை புரிவானாக. உங்கள் பொறுப்புகளை சரியான முறையில் நிறைவேற்றுகின்ற, அங்குள்ளவர்களுக்கு தர்பிய்யத் செய்கின்ற நல்வாய்ப்பை வழங்குவானாக.'' *(WTT-7947/17.07.2015)*

இலண்டனிலுள்ள வகீல் சாஹிப் தஃமீலோ தன்ஃபீஸ் அவர்கள் ஹுஸூர் அவர்களின் இந்த கவலைக்குரிய வழிகாட்டலை அனுப்பியவாறு இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

'' ஹுஸூர் அவர்களின் மேற்குறிப்பிட்டுள்ள வழிகாட்டல் மேலிடத்திலுள்ள பொறுப்பாளர்களாகிய உங்கள் அனைவருக்கும் கவலைக்குரியதாகும். இந்த

சந்தர்ப்பத்தில் இந்தியாவிலுள்ள எல்லா சகோதரர்களும் ஜமாஅத்தின் தர்பிய்யத்திற்காக பொருத்தமான அவசியமான ஏற்பாடுகளை உடனே செய்யவில்லை என்றால் அன்சார் சகோதர்களுடன் குத்தாம், அத்ஃபால் சகோதரர்களிடமும் தர்பிய்யத்தில் அதிகமான பலவீனங்கள் எஞ்சியிருக்க சாத்தியமிருக்கிறது. அதற்குப் பொறுப்பாளியாக பெற்றோர்களுடன் ஜமாஅத் பொறுப்பாளர்களும் இருப்பார்கள். இது தொடர்பாக வருங்காலத்திற்கென்று ஹுஸூர் அவர்களிடமிருந்து வழிகாட்டலைப் பெற்ற பிறகு கீழ்வரும் வழிகாட்டல் வழங்கப்படுகிறது:

1. எல்லா மேலிடத்துப் பள்ளிவாயில்களிலும், ஜமாஅத்தின் சுற்றுவட்டாரத்திலுள்ள பள்ளிவாயில்களிலும் ஐந்து வேளைகளிலும் முழுமையான வருகையுடன் ஜமாஅத்தாகத் தொழுவதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்தவும். மேலும் இது தொடர்பாக வட்டார அளவில் ஜமாஅத்தின் எல்லா பொறுப்பாளர்களும், கிளை அமைப்புகளின் எல்லா பொறுப்பாளர்களும் வட்டாரத்தில் எந்தெந்த சகோதரர்கள் தொழுகைகளில் சோம்பேறிகளாக இருக்கிறார்கள்? என்பதைப் பற்றி முழுவதுமாக ஆய்வு செய்து குறிப்பெடுங்கள். பிறகு அப்படிப்பட்ட எல்லா சகோதரர்களுக்கும் வட்டார அளவிலான ஜமாஅத் பொறுப்பாளர்கள் மற்றும் கிளை அமைப்பின் பொறுப்பாளர்கள் பொருத்தமான, தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கவனமூட்டுங்கள். மேலும் அந்த பொறுப்பாளர்கள் கவனமூட்டும் முறை எந்த அளவுக்கு நல்ல முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இருக்க வேண்டுமென்றால் அப்படிப்பட்ட எல்லா சகோதரர்களுக்கும் தமது பலவீனத்தைப் பற்றி உணர்வு ஏற்பட வேண்டும். மேலும் அவர்கள் தம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சகோதர்கள் திருப்பி அந்தப் பொறுப்பாளர்களின் மீதே தவறான எண்ணம் கொள்ளும் அளவுக்கு இருக்கக் கூடாது. மேலும் அதற்கு

முதன் முதலில் எல்லா மேலிட, வட்டார அளவிலான ஜமாஅத் பொறுப்பாளர்கள், கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்கள் தமது மற்றும் தமது பிள்ளைகளின் முன்மாதிரியைக் காட்ட வேண்டியது வரும். பொறுப்பாளர்கள் அல்லது அவர்களின் பிள்ளைகள் தொழுகைகளில் சோம்பேறிகளாக இருந்துகொண்டு ஜமாஅத்தின் மற்ற உறுப்பினர்களையும் அவர்களின் பிள்ளைகயையும் ஜமாஅத்தாகத் தொழுமாறு அறிவுறுத்துவது என்பது நடக்காது.

2. ஒவ்வொரு மேலிட பள்ளிவாயில்களிலும், வட்டார பள்ளிவாயில்களிலும் ஃப்ஜ்ர், அஸ்ர் தொழுகைக்குப் பிறகு தொடர்ந்து திருக்குர்ஆன் தர்ஸ், ஹதீஸ் தர்ஸுக்கான ஏற்பாடு இருக்க வேண்டும். அந்த சந்தர்ப்பத்திலும் அதிகமான சகோதரர்கள் வருகை தருவதற்கு வட்டாரத்திலுள்ள ஜமாஅத்தின், கிளை அமைப்புகளின் எல்லா ஏற்பாட்டாளர்களும் முயற்சி செய்ய வேண்டும்.

3. காலத்தின் கலீஃபாவின் ஜுமுஆ பேருரை, பெருநாள் பேருரைகள், பல்வேறு நாடுகளில் நடக்கும் மாநாடுகள், கிளை அமைப்புகளின் இஜ்திமாக்கள் ஆகிய சந்தர்ப்பங்களில் ஆற்றப்படும் சொற்பொழிவுகள் ஜமாஅத் சகோதரர்களுக்கு ஒட்டுமொத்தமாக கேட்பதற்கும் பார்ப்பதற்கும் ஜமாஅத் ஏற்பாட்டாளர்கள் சார்பாக தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு இருக்க வேண்டும். இதற்காகவும் முதன் முதலில் மேலிடத்தின், ஜமாஅத்தின், கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களும், அவர்களின் பிள்ளைகளைகளுடன் இந்த சந்தர்ப்பங்களில் வந்து தமது முன்மாதிரியைக் காட்ட வேண்டியது வரும். மேலும் அதற்குப் பிறகு ஜமாஅத்தின் மற்ற சகோதரர்களுக்கு அறிவுரை கூற வேண்டும்.

4. இந்திய ஜமாஅத் சகோதரர்களின் தர்பிய்யத்திற்காக ஜமாஅத் பத்திரிகையான பத்ர் வாரப் பத்திரிகை உருது மட்டுமின்றி இந்தி மற்றும் பிற மாநில

மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. இந்த வெளியீடுகளிலிருந்து ஜமாஅத் சகோதரர்கள் எந்த அளவுக்கு பெயன் பெறுகிறார்கள் என்பதைப் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் ஒவ்வொரு வீட்டிலும் இந்த வரலாற்று சிறப்பு மிக்க ஜமாஅத் பத்திரிகையின் ஒரு பிரதியை கண்டிப்பாக வாங்க முயற்சி செய்யவும்.

இந்த வழிகாட்டலை செயல்படுத்துவது தொடர்பாக குறிப்பிடப்படுவது என்னவென்றால்:

**i.** காதியானிலும், இந்தியாவின் பெரிய, வட்டார அளவிலான எல்லா பள்ளிவாயிகளிலும் தொழுகின்ற சென்டர்களிலும் வழிகாட்டலுக்கேற்ப ஐவேளை தொழுகைகளின் நேரத்தில் முழுமையான வருகைக்காக எல்லா மேலிட, ஜமாஅத்தின், கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்கள் மூலமாக மேற்கூறப்பட்ட வழிகாட்டலின் ஒளியில் நடவடிக்கை எடுங்கள். அவ்வாறே ஃபஜ்ர், அஸ்ர் தொழுகைகளுக்குப் பிறகு திருக்குர்ஆன், ஹதீஸ் தர்ஸுக்கான ஏற்பாட்டையும் எல்லா பள்ளிவாயிகளிலும்/ தொழும் சென்டர்களிலும் குறிப்பாக ஏற்பாட்டைச் செய்யுங்கள். மேலும் அந்த சந்தர்ப்பத்திலும் முழுமையான வருகைக்காக தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கையை மேற்கூறப்பட்ட வழிகாட்டல்களின் ஒளியில் செய்யுங்கள்.

**ii.** ஒவ்வொரு ஜுமுஆவின்போதும் காலத்தின் கலீஃபா அவர்களின் நேரடி குத்பா ஜுமுஆ, பெருநாள் குத்பா, பல்வெறு நாடுகளில் நடக்கும் மாநாடுகள், கிளை அமைப்புகளின் இஜ்திமாக்களின் சந்தர்ப்பத்தில் ஆற்றப்படும் உரைகள் ஆகியவற்றை ஜமாஅத் சகோதரர்களுக்கு ஒட்டுமொத்தமாகக் காட்டுவதற்காக இந்தியாவின் எல்லா ஜமாஅத்துகளிலும் மேலிட, வட்டார பள்ளிவாயில்களில்/தொழும் சென்டர்களில் M.T.A-விற்கான ஏற்பாடு செய்யுங்கள். மேலும் அந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் குறிப்பாக காதியானில் தத்தமது வட்டாரங்களிலுள்ள பள்ளிவாயில்களில் அந்த

வட்டாரத்தில் இருக்கும் மேலிடத்தின் எல்லா அதிகாரிகளும், பணியாளர்களும், ஜமாஅத்தின், கிளை அமைப்புகளின் எல்லா பொறுப்பாளர்களும் தமது பிள்ளைகளுடன் ஜுமுஆ பேருரையைக் கேட்பதற்காக எல்லாரையும் விட முதலில் அவர்கள் வர வேண்டும். மேலும் இந்த சந்தர்ப்பத்தில் வராத ஜமாஅத்தின் எல்லா உறுப்பினர்களையும் பற்றிய பதிவேட்டை வட்டாரத்திலுள்ள பொறுப்பாளர்கள் இரகசியமான முறையில் ஆயத்தம் செய்யவும். பிறகு அப்படிப்பட்டவர்களுக்கு கவனமூட்டுவதற்காகவும் அவர்களை சீர்திருத்தம் செய்வதற்காகவும் வட்டாரத்திலுள்ள பொறுப்பாளர்களும் சீர்திருத்தக் குழுக்களும் இணைந்து செயல்முறைப்படுத்தவும்.

**iii.** பத்ர் வார இதழின் பல்வேறு மொழிகளில் உள்ள வெளியீடுகளை இந்தியாவிலுள்ள ஜமாஅத்தின் ஒவ்வொரு வீடுகள் வரை சென்றடைய வைப்பதற்கான முயற்சியை ஆரம்பியுங்கள். மற்ற உள்ளூர் மொழிகளிலும் பத்ர் வெளியீடு துவக்கப்படுவது கணிசமான தேவை எனக் கருதினால் அந்த மொழிகளிலும் பத்ர் வெளியீடுகளை துவக்குவது தொடர்பாக முறைப்படி முயற்சி செய்யுங்கள்.

✸ மேற்கூறப்பட்ட எல்லா வழிகாட்டல்களையும் காதியான் மற்றும் இந்தியாவின் எல்லா ஜமாஅத்துகளிலும், அடுத்து வட்டாரங்களிலும் ஜமாஅத்தின் கிளை அமைப்புகளின் ஏற்பாட்டாளர்கள் சார்பாக சுற்றறிக்கையாக அனுப்ப வேண்டும் என்ற வலியுறுத்தலுடன் அறிவிப்பு செய்யுங்கள். மேலும் இது தொடர்பாக உடனே செயல்படுத்துங்கள். மேலும் மேற்கூறப்பட்ட எல்லா விஷயங்கள் பற்றிய செயல்பாடு தொடர்பாக மாதாந்திர அறிக்கை கொடுக்கும் வகையில் இனி வட்டார அளவிலும், கிளை அமைப்பு அளவிலும், ஜமாஅத் அளவிலும் மாதாந்திர அறிக்கையில் ஒரு கட்டம் அதிகமாக்கவும். மேலும் சம்பந்தப்பட்ட எல்லா பொறுப்பாளர்களும் இந்த விஷயங்கள் தொடர்பாகவும் ஒவ்வொரு மாதாந்திர

அறிக்கையிலும் விபரமாக தங்கள் அறிக்கை அனுப்பவும்.

அவ்வாறே மேற்கண்ட விஷயங்கள் தொடர்பாக வட்டார அளவிலான பொறுப்பாளர்கள் செயல்பட வேண்டும் என்பதன் பொருள், வட்டாரத்திற்கு மேல்மட்டத்திலுள்ள ஜமாஅத்தின், கிளை அமைப்பின் எல்லா பொறுப்பாளர்களுக்கும் மேற்கூறப்பட்ட விஷயங்கள் தொடர்பாக எந்த பொறுப்பும் இல்லை என்று ஒருபோதும் இல்லை. கடைசி பொறுப்பு வட்டாரத்தின் மேல்மட்டத்திலுள்ள எல்லா பொறுப்பாளிகளுக்குத்தான் இருக்கிறது. எனவே இவர்கள் அனைவரும் தத்தமது பொறுப்புகளுக்கான உரிமைகளை நிறைவேற்ற வேண்டும். மேலும் முழுமையாக கண்காணியுங்கள். மேற்கூறப்பட்ட வழிகாட்டல்களின் ஒளியில் இந்தியாவிலுள்ள ஜமாஅத்துகளில் எல்லா ஏற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் முழுமை செய்யும் அடிப்படையான பொறுப்பு ஜமாஅத்தின் தலைவர்/அமீர் மற்றும் கிளை அமைப்புகளின் உள்ளூர் தலைவர்/ஸயீம்/ லஜ்னா தலைவி ஆகியோருக்கு இருக்கிறது. அவ்வாறே காதியானில் உள்ளூர் அமீர் மற்றும் மேலிடத்தின் மூன்று கிளை அமைப்புகளின் தலைவர்கள் தத்தமது வட்டத்தில் பொறுப்பாளியாவார்கள். எப்படியிருந்தாலும் கீழ் மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையிலான எல்லா கிளை அமைப்புகள், ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் துஆக்களுடன் தனது மற்றும் தனது பிள்ளைகளின் முன்மாதிரியை எடுத்து வைத்தவாறு இது தொடர்பாக அசாதாரணமான முறையில் வேலை செய்யும்போதுதான் மேற்கூறப்பட்ட விஷயங்கள் தொடர்பாக நேர்மறை விளைவுகள் ஏற்பட ஆரம்பிக்கும். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன். (கடித எண்: WTT-8420/12.08.2015)

மேற்கூறப்பட்ட அடிப்படையான வழிகாட்டல் தொடர்பாக ஒரு மேலிட குழுவில் ஆலோசனை செய்து மேற்கூறப்பட்ட வழிகாட்டல்களைக் குறிப்பிட்டு

ஒவ்வொரு வழிகாட்டலின்படி செயல்படுவதற்காக ஒரு செயல்முறைத் திட்டத்தையும் உருவாக்கி எல்லா மாவட்ட அமீர்மார்கள், ஜமாஅத் அமீர்மார்கள், தலைவர்கள், முபல்லிக்மார்கள் ஆகியோருக்கு ஆகஸ்டு 2015-ல் சுற்றறிக்கை அனுப்பட்டிருந்தது.

இந்த ஆலோசனை மற்றும் அறிக்கையை ஹுஸூர் அவர்களுக்கு முன் எடுத்து வைத்தபோது ஹுஸூர் அவர்கள் கீழ்வருமாறு கட்டளை இட்டிருந்தார்கள்:

''நன்று. அனுப்பட்டிருக்கும் வழிகாட்டல்களுக்கேற்ப உடனே செயல்படுத்த ஆரம்பித்து விடுங்கள். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் தத்தமது பொறுப்புகளை அழகிய முறையில் நிரைவேற்றும் நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும் ஒவ்வொரு அடியிலும் தனது ஆதரவையும் உதவியையும் வழங்குவானாக. ஆமீன்.'' (கடித எண்: **WTT**-8587/ 18.08.2015)

மேற்கூறப்பட்ட நான்கு அடிப்படையான வழிகாட்டல்களின்படி செயல்படுத்தவும் அவற்றிலிருந்து உறுதியான விளைவைப் பெறவும் நஸாரத் உல்யாவின் மாதாந்திர அறிக்கைப் படிவத்தில் அதற்கான ஒரு தனி கட்டம் அதிகமாக்கப்பட்டுள்ளது. அதன் முன்மாதிரி கடைசி பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறகு இந்திய ஜமாஅத்துகளில் பெருகிவரும் தர்பிய்யத் பிரச்சனைகளை குறித்த நேரத்தில் தீர்வு காண்பதற்காக ஹுஸூர் அவர்கள் காதியானில் ஒரு மேலிட சீர்திருத்தக் குழுவை நியமித்துள்ளார்கள். அதற்குத் தலைவராக நாஸிர் அஃஃலா அவர்களையும் செயலராக நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது மர்கஸிய்யா அவர்களையும் நியமித்துள்ளார்கள். மேலும் இந்தியாவின் எல்லா ஜமாஅத்துகளிலும் கீழ்வரும் விபரப்படி சீர்திருத்தக் குழுக்களை நியமிக்கும்படி வழிகாட்டியுள்ளார்கள்:

| எண் | பதவி அளவில் | வட்ட அளவில் | உள்ளூர் ஜமாஅத் அளவில் |
|---|---|---|---|
| 1. | சீர்திருத்தக் குழுவின் தலைவர் | வட்ட தலைவர் | உள்ளூர் ஜமாஅத் தலைவர்/அமீர் |
| 2. | சீர்திருத்தக் குழுவின் செயலர் | வட்ட இஸ்லாஹோ இர்ஷாது செயலர் | உள்ளூர் இஸ்லாஹோ இர்ஷாது செயலர் |
| 3. | உறுப்பினர் | வட்ட உமூரே ஆம்மா செயலர் | உள்ளூர் உமூரே ஆம்மா செயலர் |
| 4. | உறுப்பினர் | வட்ட குத்தாமுல் அஹ்மதிய்யா ஸயீம் | உள்ளூர் காயித் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா |
| 5. | உறுப்பினர் | வட்ட அன்ஸாருல்லாஹ் ஸயீம் | உள்ளூர் ஸயீம் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் |
| 6. | உறுப்பினர் | வட்ட லஜ்னா தலைவி | உள்ளூர் லஜ்னா தலைவி |
| 7. | உறுப்பினர் | வட்ட முபல்லிக்/ முஅல்லிம் | உள்ளூர் ஜமாஅத் முபல்லிக் |

சீர்திருத்தக் குழு ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து கூட்டம் நடத்துவதற்கும், அறிக்கை அனுப்புவதற்கும் ஹுஸூர் அவர்களின் கட்டளைக்கிணங்க மேலிட சீர்திருத்தக் குழு ஒரு அறிக்கைப் படிவத்தை ஆயத்தம் செய்து ஹுஸூர் அவர்களிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுள்ளது. அது அடுத்து குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் இந்தப் படிவம் மொழியாக்கம் செய்து அனுப்பப்படுகிறது.

இப்போது செயல்படுவதும் செயல்பட வைப்பதும் அவசியமாகும். அல்லாஹ் தனது அருளால் எல்லா பொறுப்பாளர்களுக்கும் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

# ஜமாஅத் அமீர்/தலைவருக்கான மாதாந்திர அறிக்கை படிவம்

| எண் | கேள்வி | அறிக்கை | நிலவரம் |
|---|---|---|---|
| 1. | ஜமாஅத்தின் அனைத்து பொறுப்பாளர்கள் மற்றும் தொழுகை கடமையான அவர்களின் குழந்தைகளின் பட்டியல் ஆயத்தம் செய்யப்பட்டு விட்டதா? | | |
| 2. | இதற்கேற்ப ஜமாஅத்தான தொழுகை குர்ஆன்/ஹதீஸ்/ மல்ஃபூஸாத் தர்ஸ்களில் கலந்து கொள்பவர்கள் பற்றி கண்காணிக்கப்படுகிறதா? | | |
| அ. | எத்தனை பொறுப்பாளர்கள், அவர்களின் பிள்ளைகள் எண் 1,2 ன் படி கடைபிடித்துள்ளனர்? | | |
| ஆ. | எத்தனை பொறுப்பாளர்கள், அவர்களின் பிள்ளைகள் எண் 1,2 ல் பின்தங்கிய நிலையில் உள்ளனர்? | | |
| இ. | எண் 1,2 ல் ஜமாத் சகோதரர்கள் வருகை எந்த அளவுக்கு இருக்கிறது? | | |
| 3. | ஹுஸூர் அவர்களின் ஜுமுஆ பேருரை, சொற்பொழிவுகள் நேரடி ஒளிபரப்பை கேட்பதற்கான ஏற்பாடு இருக்கிறதா? | | |
| அ. | பள்ளிவாயில்/தொழும் இடங்களில் எத்தனை பொறுப்பாளர்கள், அவர்களின் பிள்ளைகள் ஒன்றுகூடி குத்பாவை கேட்கின்றனர்? | | |
| ஆ. | ஜமாஅத்தின் எத்தனை மற்ற உறுப்பினர்கள் குத்பாவை கேட்கின்றனர்? | | |
| 4. | எத்தனை வீடுகளில் பத்ர் பத்திரிகை வாங்கப்படுகிறது? | | |
| அ. | மற்ற வீடுகளில் வாங்க வைப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது? | | |

# சீர்திருத்தக் குழு தொடர்பான அறிக்கை படிவம்

ஜமாத்தின் பெயர் உறுப்பினர்களின்எண்ணிக்கை

.....................மாத அறிக்கை 2016.

குறிப்பு: சீர்திருத்தக் குழுவில் இஸ்லாஹோ இர்ஷாத் செயலர், உமூரே ஆம்மா செயலர், காயித் குத்தாமுல் அஹ்மதிய்யா, ஸயீம் அன்ஸாருல்லாஹ், ஸத்ர் லஜ்னா இமாயில்லாஹ் ஆகியோர் சார்பாக கீழ்வரும் அறிக்கைகள் வர வேண்டும். அதாவது இன்ன காதிம், திஃப்ல், அன்ஸாருல்லாஹ், லஜ்னா உறுப்பினர்கள் ஆகியோரிடம் இன்ன பலவீனங்கள் இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| தொழுகை | தொழுகையை கைவிட்டவர்களின் எண்ணிக்கை..........<br>தொழுகையை கைவிட்டவர்களில் எத்தனை நபர்களுடன் தொடர்பு கொள்ளபட்டது?...........<br>ஜுமுஆவை கைவிட்டவர்களின் எண்ணிக்கை...........<br>ஜுமுஆவை கைவிட்டவர்களில் எத்தை நபர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டது?.............<br>மேற்கொள்ளபட்ட நடவடிக்கையின் விளைவு.................... | |
| ஜுமுஆ பேருரை, சொற்பொழிவுகளின் நேரடி ஒளிபரப்பு | பள்ளிவாயிலுக்கு வந்து ஜுமுஆ பேருரையை கேட்பவர்களின் எண்ணிக்கை?.................<br>எத்தனை நபர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டது?............<br>(MTA Live) ஜுமுஆவை கைவிட்டவர்களின் எண்ணிக்கை................<br>கூட்டங்களில் கலந்து கொள்ளாதவர்களின் எண்ணிக்கை........<br>மேற்கொள்ளபட்ட நடவடிக்கையின் விளைவு.................... | |
| சண்டை சச்சரவுகள் | சண்டை சச்சரவுகளின் மொத்த எண்ணிக்கை.................<br>கணவன் மனைவிக்கு இடையிலான பிணக்குகள்............<br>சொத்துகள், கொடுக்கல் வாங்கள் விவகாரங்கள்.............<br>ஒருவருக்கொருவர் இடையிலான விவகாரங்கள்............<br>ஒருவர் மற்றவர் மீது தொடுத்த வழக்குகளின் எண்ணிக்கை.............<br>ஜமாஅத்தின் எத்தனை சகோதரர்கள் நீதி மன்றத்தின் பக்கம் திரும்பியுள்ளனர்?...........<br>இது தொடர்பாக சீர்திருத்தக் குழு செய்த நடவடிக்கையின் விளைவு...................... | |

| | | |
|---|---|---|
| திருமண<br>உறவுகள் | எத்தனை நபர்கள் வெளியே திருமணம் செய்துள்ளனர்?..........<br>எத்தனை நபர்கள் அப்படிப்பட்ட சிந்தனையில் இருக்கின்றனர்?<br>(அவர்களின் பெயரும் அறிக்கையும்)............<br>புரிய வைப்பதற்காக மேற்கொள்ளபட்ட நடவடிக்கையின்<br>விளைவு................... | |
| பிற விஷயங்கள் | பொறுப்பாளர்கள் மற்றும் முபல்லிக்/முஅல்லிம்<br>ஒருவருக்கொருவர் தொடர்பு எவ்வாறு இருக்கிறது?<br>பொறுப்பாளர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு எவ்வாறு<br>இருக்கிறது?<br>பர்தாவை பேணாத பெண்களின் எண்ணிக்கை?.............<br>இன்டர்நெட்டை தவறாக பயன்படுத்துபவர்களின்<br>எண்ணிக்கை...............<br>தீயவர்களுடன் பழகுபவர்களின் எண்ணிக்கை..............<br>போதைகளுக்கு பழக்கமானவர்களின் எண்ணிக்கை............<br>இந்த எல்லா விஷயங்களையும் சீர்திருத்துவதற்கு<br>மேற்கொள்ளபட்ட முயற்சியின் விளைவு................. | |

அறிக்கைப் பற்றிய கருத்து:

சீர்திருத்த குழு தலைவரின் பெயர்: கையொப்பம்(தேதி,முத்திரையுடன்)

கைப்பேசி எண்:

முழு முகவரி: மின்னஞ்சல் முகவரி:

அஞ்சல் குறியீடு: